# வானவில்

**VAANAVIL**

இதழ் - 85
தை 2018

ISSUE – 85
JANUARY 2018


# ஜனாதிபதி – பிரதமர் உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும்!

தற்போதைய மைத்திரி – ரணில் தலைமையிலான 'நல்லாட்சி' அரசு மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் இரண்டுக்கும் இடையிலான விரிசல்களும் மோதல்களும் முன்னெப்போதையையும் விட தீவிரமடைந்துள்ளன.




ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பகிரங்கமாக விமர்சித்து வரும் நிலையில் ஜனாதிபதியும் பதிலுக்கு ஐ.தே.கவை நேரடியாகவே விமர்சித்து வருகின்றார்.

ஜனாதிபதி தமது விமர்சனங்களில் ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கம் கடந்த மூன்றாண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில் எதனையும் செய்யவில்லை என்றும், இனிமேல் பொருளாதார விடயங்களைத் தானே நேரடியாக நிர்வகிக்கப் போவதாகவும் அண்மையில் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அறிவிப்பு அரச பங்காளிக் கட்சிகள் இரண்டுக்குமிடையிலான மோதலின் உச்சக் கட்டத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இதில் வேடிக்கையான விடயம் என்னவெனில், மூன்றாண்டுகளுக்கு முன்னர், தான் பொதுச் செயலாளராக இருந்த தனது சொந்தக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு துரோகம் இழைத்துவிட்டு, ஐ.தே.கவின் உதவியுடன்தான் மைத்திரி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து சர்வ வல்லமை படைத்த அரச தலைவராக மைத்திரியே இருந்து வருகின்றார். எனவே பொருளாதாரப் பின்னடைவு உட்பட நாட்டில் உருவாகியுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி மைத்திரியும் பொறுப்புக் கூற வேண்டிய பிரதான நபராவார்.

அப்படியிருக்க ஐ.தே.கவை மட்டும் குற்றஞ்சாட்டி விட்டு, தான் தப்பிக்க முயற்சிப்பது ஜனாதிபதி மைத்திரியின் அரசியல் நேர்மையீனத்தையே எடுத்துக் காட்டுகிறது. அதுவும் மூன்றாண்டுகளாக தவறுகள் நடைபெறுவதை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இப்பொழுது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ள நேரத்தில், தனது சுதந்திரக் கட்சி மூன்றாவது நிலைக்குத் தள்ளப்படப் போகின்றது (புலனாய்வு அறிக்கைகளும் அவ்வாறே கூறுகின்றன) என்ற அச்சத்தில் மைத்திரி திடீரெனக் கூச்சலிடுவது நாட்டு மக்களுக்கு வேடிக்கைக் காட்சியாக இருக்கின்றது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எண்ணிலடங்காதவை. அதிலும் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் ரணில் - மைத்திரி குழுவினரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் திட்டமிட்டு நடாத்திய நாடகங்கள். அப்படி வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒரு சதவீதம் கூட இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

அதற்குப் பதிலாக இந்த அரசாங்கத்தால் செய்யப்பட்ட சாதனைகள் என்னவென்றால், முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தியமை, மேலும்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# எட்டாவது ஆண்டில் வானவில்

உங்கள் கரங்களில் தவழும் இந்த இதழில் வானவில் தனது எட்டாவது ஆண்டில் காலடி வைக்கின்றது. மிகவும் மகிழ்ச்சியான இந்த தருணத்தில், வானவில் 2011 ஆம் ஆண்டு தனது முதலாவது இதழ் ஆசிரியர் தலையங்கத்தில் 'வாசகர்களுக்கு ஒரு வார்த்தை' என்ற தலைப்பில் முதலாவது பத்தியில் எழுதியதை மீளவும் நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்குமென நம்பி கீழே தருகிறோம்.

'கனடாவில் வண்ண வண்ண நிறங்களில், தொகையான பக்கங்களில், பரபரப்பான செய்திகளுடனும், ஏராளமான விளம்பரங்களுடனும், இலங்கைத் தமிழர்களால் நடாத்தப்படும் சுமார் இரண்டு டசின் தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகள் இருக்கையில், இந்தச் சின்னஞ்சிறு கையேடான வானவில் வந்து, என்னத்தைச் சாதிக்கப் போகின்றது என்ற கேள்வி, உங்கள் பலரின் மனதில் எழக்கூடும். உண்மைதான், வானவில் உடனடியாகப் பெரிதாக எதையும் சாதித்து விடப்போவதில்லைதான்!'

பெரிய பிரகடனங்கள் எதுவுமில்லாமல் மிகவும் சாதாரணமான வார்த்தைகளுடனேயே வானவில் இதழ் ஆரம்பிக்கப்பட்டது. இப்போதும் நாங்கள் ஏதோ அதிகம் சாதித்து விட்டதாக சொல்லப் போவதில்லை. ஏனெனில் இன்னமும் சாதிப்பதற்கு ஏராளங்கள் இருக்கின்றன என்பது எங்களுக்கு நன்கு தெரியும். கடந்த ஏழு ஆண்டுகளாக வானவில் தொடர்ச்சியாக அதிகம் சத்தம் சந்தடியில்லாமல் கறுப்பு - வெள்ளையில் எளிமையாக வெளிவருகின்றதென்பதே வானவில் சாதித்ததில் ஒரு சிறிய பகுதி என்று கொள்ளலாம். விளம்பரப்படுத்தாமலும், ஜனரஞ்சகம் ஊட்டாமலும், வர்த்தக நோக்கங்களின்றியும் உலகின் எந்த மொழியாக இருந்தாலென்ன, எந்தவொரு ஊடகமும் நின்று பிடிப்பது என்பது மிகமிகக் கடினம். எனினும் இந்த நோக்கங்கள் எதுவுமின்றி வானவில் தனக்கென ஒரு பரந்துபட்ட வாசகர் வட்டத்தை கடந்த ஏழு ஆண்டுகளில் உருவாக்கியுள்ளது என்பது எவராலும் மறுக்கமுடியாதோர் உண்மை. எனவே வானவில் இதழ் மேலும் பெரிதாக ஏதாவது சாதித்து விட்டதா என்பதைக் கணிப்பதை வாசகர்களாகிய உங்களிடமே விட்டுவிடுகின்றோம்.

நடுநிலை என்று ஒன்று இல்லை, நடுநிலை என்பதே சார்பானது என்பதால், அன்றும் இன்றும் வானவில் யாருக்கு சார்பானது என்ற விவாதங்கள் எமது செவிகளுக்கு கேட்கும் வகையிலும், திரைமறைவிலும் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. மேலாதிக்க சக்திகளின் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் இலங்கை தேசத்தை மீட்டெடுப்பதற்கு கடந்த சில வருடங்களாக வானவில் குரல் கொடுத்து வருவது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இதனால் 'விமர்சனம்' என்ற பெயரில், தற்போதைய இலங்கை அரசின் எதிர்க்கட்சிகளின் சார்பாளர்களாக இலகுவாக எம்மை முத்திரை குத்திவிடும் வகையறாக்கள் எம்மிடையே தாராளமாக இருக்கிறார்கள். இந்த மாதிரியாக 'நீ அந்த முகாமில் இல்லாவிட்டால் அதற்கெதிரான முகாமைச் சேர்ந்தவன்' என்ற மலினமான முடிபுகளை எடுப்பவர்கள் மீது நாம் அதிகம் அக்கறைப்படத் தேவையில்லை. அவ்வாறனவர்கள் எந்த முகாமைச் சேர்ந்தவராக இருக்கக் கூடுமென என்று எதிர்வாதம் புரிந்து, நேரத்தை விரயமாக்கி, நாங்கள் கடைப்பிடித்து வரும் மையக்கருத்திலிருந்து விலகிச் செல்லவும் விருப்பமுமில்லை. இதனால் நாங்கள் தொடர்ச்சியாக எமது கருத்திலிருந்து வழுவாது, பிசகாது பயணிப்பதே நல்லதென எண்ணுகின்றோம். மேலும் எமது சார்புநிலை பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கு, நாங்கள் சகல ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மாத்திரமே சார்பானவர்கள் என்பதையும் அழுத்தம் திருத்தமாகக் கூற விரும்புகின்றோம்.

வானவில் முற்றுமுழுதான ஒரு மார்க்சிய – லெனினிச தத்துவார்த்த ஏடல்ல என்பது, நமது ஏழாண்டுகால இதழ்களை புரட்டிப் பார்த்தவர்களுக்கு எளிதில் புரிந்துவிடும். அதேநேரத்தில் கர்ணகடூரமான ஏகாதிபத்திய மற்றும் மேலாதிக்க சக்திகள் மீதான எதிர்ப்புணர்வோடும், இடதுசாரிக் கருத்துக்களை அடியொற்றியும், அக்கருத்துக்களை உயர்த்திப் பிடித்துமே வானவில் வெளிவருகின்றது என்பதும் வானவில் இதழ்களைப் படிப்பவர்களுக்குத் தெரியும்.

உலகம் முழுவதையும் அரசியல், பொருளாதார ரீதியில் தனது கட்டுபாட்டிற்குள் கொண்டுவர நாளொரு பொழுதொரு மேனியாக ஏகாதிபத்தியங்கள் இடைவிடாது தம்மாலான முயற்சிகள் எடுத்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் அம்மாதிரியான முயற்சிகளுக்கெதிரான போராட்டங்களும் உலகம் முழுவதும் நடந்து கொண்டுதானிருக்கின்றது. இதன் காரணமாக முன்னெப்போதுமில்லாத வகையில் உலகம் மிகவும் நெருக்கடியான நிலையிலுள்ளது. இந்த நெருக்கடிக்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. அதனால், உலக நெருக்கடிகளுக்கான காரணிகள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களுக்கும் முன்னுரிமை கொடுத்து வெளியிட வேண்டிய காலகட்டத்தில் வானவில் இருக்கின்றது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

எட்டாவது ஆண்டில் காலடி வைக்கும் இந்தத் தருணத்தில், நேரிலும் மின்னஞ்சல் வாயிலாகவும் வானவில் இதழை ஊக்குவித்தும், வானவில் இதழ்களை விநியோகித்தும், கட்டுரைகள் எழுதியும், ஆங்கிலக் கட்டுரைகளை மொழிபெயர்த்தும் வரும் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**வானவில்**

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.

## புத்தாண்டு – தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

வானவில் வாசகர்கள் அனைவருக்கும் பிறந்துள்ள 2018ஆம் ஆண்டில் இனிய புத்தாண்டு – தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- 'வானவில்' ஆசிரிய குழு**

# முதலாளித்துவ ஜனநாயகம்

(பேராசிரியர் ஜோர்ச் தொம்சனின் (George Thomson) இந்தக் கட்டுரை அவரது சொந்த நாடான இங்கிலாந்தின் நிலைமையை மட்டுமின்றி, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனி நாடுகளாக ஒரு காலத்தில் இருந்த எமது இலங்கை மற்றும் இந்தியா உட்பட பல நாடுகளில் இன்று நிலவுகின்ற முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தை அச்சொட்டாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்நாடுகளில் உள்ள முதலாளித்துவ ஜனநாயகத்தை வாசகர்கள் விளங்கிக் கொள்வதற்கு இக்கட்டுரை பெரிதும் துணை புரியும் என நம்புகின்றோம். – **'வானவில்' ஆசிரிய குழு**)

**மு**தலாளித்துவ சமுதாயத்திற்குச் சிறப்பியல்பாக உள்ள அரசு வடிவம் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகமாகும். தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட சமத்துவம் சட்டத்தால் பறைசாற்றப்படுகின்ற, ஆனால் உண்மையில் இல்லாத ஒன்று. இந்தக் கற்பனையின் அரசியல் வெளிப்பாடுதான், 'ஒருவனுக்கு ஒரு வாக்கு' என்ற முதலாளித்துவ ஜனநாயகக் கோட்பாடாகும்.

> சமத்துவம் என்ற பிரச்சினையை அருவமான முறையில் அல்லது பெயரளவுக்கு முன்வைப்பது என்பது…முதலாளித்துவ ஜனநாயகத்தின் இயல்பிலேயே இருப்பதாகும். பொதுவான தனிமனித சமத்துவம் என்ற வேடத்தின் கீழ், முதலாளித்துவ ஜனநாயகமானது சொத்து உரிமையாளருக்கும் பாட்டாளிக்கும், சுரண்டுபவனுக்கும் சுரண்டப்படுபவனுக்கும் உள்ள பெயரளவு அல்லது சட்டரீதியான சமத்துவத்தைப் பிரகடனப்படுத்துகிறது. இவ்வாறு அது ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை அப்பட்டமாக ஏமாற்றுகிறது. (லெனின் தொகுப்பு நூல்கள்–31–ப.145)

முதலாளித்துவ ஜனநாயகம் என்பதை, 'நாடாளுமன்ற வடிவங்கள் என்ற முகமூடி தரித்த முதலாளி வர்க்க சர்வாதிகாரம்' என்று லெனின் வர்ணித்தார். (லெனின் தொ.நூ.30.ப.100).



**பேராசிரியர் ஜோர்ச் தொம்சன்**

ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் உள்ள உறவு பற்றிய மார்க்சியக் கருத்தைப் புரிந்து கொள்வதற்கு, தொழில் பரட்சிச் சகாப்தத்தில் எவ்வாறு பிரித்தானிய நாடாளுமன்ற அமைப்பு உருவாகி வந்தது என்பதை ஆராய்வது உதவியாக இருக்கும்.

*1832*ஆம் ஆண்டு சீர்திருத்த மசோதாவுக்கு முன்பு அரசாங்க நிர்வாகமானது – அதாவது ஆயுதப்படைகளைக் கட்டுப்படுத்துதல், சட்டம் - ஒழுங்கு ஆகியவற்றைப் பராமரித்தல் மற்றும் நீதி நிர்வாகம் என்பன நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்நாடாளுமன்றத்தில் மக்கள் தொகையிலுள்ள ஒரு மிகக் குறுகிய சிறுபான்மையினர் – நிலப்பிரபுக்கள், வணிகர்கள், வங்கி அதிபர்கள் – மட்டுமே பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர். பெருந்திரளான மக்கள் வாக்குரிமையிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். அதற்குக் கூறப்பட்ட காரணம், அக்கால ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த எட்மண்ட் பர்க்கின் மேலே கூறப்பட்டுள்ள கூற்றில் காணப்படுவது போல, அவர்கள் ஆளப்படுவதற்குத்தான் தகுதி யடையவர்களே தவிர ஆள்வதற்கல்ல என்பதாகும். இது பகிரங்கமான முதலாளி வர்க்கச் சர்வாதிகாரமாகும்.

புதிய தொழில் முதலாளி வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தின் காரணமாக, பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட *1832*ஆம் ஆண்டுச் சீர்திருத்த மசோதாவின் விளைவாக, வாக்காளர் முறை திருத்தி அமைக்கப்பட்டது. இதன்படி தொழிலதிபர்களின் பொருளாதார வலிமையின் அளவுக்கேற்றபடி அரசியல் அதிகாரத்தில் அவர்களுக்குப் பங்கு தரப்பட்டது. வாக்குரிமை சொத்துடையவர்களுக்கே என வரையறுக்கப்பட்டதால், பாட்டாளி வர்க்கத்துக்கு இது வாய்க்கப் பெறவில்லை. சீர்திருத்தத்துக்கான இயக்கம் பிறகு சாசனவாதிகளால் (சாசனவாதிகள்: இங்கிலாந்தின் உழைக்கும் மக்கள் இயக்கத்தின் முன்னோடிகள். இப் பெருந்திரளான மக்களின் கோரிக்கைகள் அடங்கிய சாசனத்தை – Chart – தயாரித்து அதை நிறைவேற்றுமாறு அமைதி வழியில் போராடினார்கள்) நாடு முழுவதிலும் மக்கள் திரளினரின் கூட்டங்களின் மூலம் ஆதரவு பெற்ற சாசனவாதிகள், கீழ்காணும் கோரிக்கைகள் அடங்கிய பட்டியலை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தனர்: சரிசமமான வாக்காளர் தொகுதிகள் அமைத்தல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவதற்குச் சொத்துத்தகுதி வைத்திருப்பதை அகற்றுதல், வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை, ஆண்டு தோறும் நாடாளுமன்றத் தேர்தலை நடாத்துதல், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்குதல் ஆகியவையாகும். இக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்குமானால், மக்கள் தொகையில் பெரும்பான்மையாக இருந்த பாட்டாளிகள் அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வழி ஏற்பட்டிருக்கும். ஆனால் இக்காரணத்தாலேயே முதலாளி வர்க்கம் இக்கோரிக்கைளை எதிர்த்தது. அரசாங்கம் இராணுவத்தையும் காவல் படையையும் வரவழைத்து சாசன இயக்கத்தை நசுக்கியது. நாடாளுமன்றச் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக இருந்த பூர்சுவா முற்போக்குவாதிகள் கூட, தாம் பாட்டாளி வர்க்க அதிகாரத்துக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதை விரும்பவில்லை.

சாசன இயக்கம் தோல்வியடைந்ததை அடுத்த காலகட்டத்தில் பிரித்தானிய ஆளும் வர்க்கம் படிப்படியாக நாடாளுமன்றச் சீர்திருத்தல் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. அதன் விளைவாக இன்று நாம் காண்கின்ற பிரித்தானிய அரசியல் அமைப்பு

உருவாயிற்று. இந்த அமைப்பில் சாசன இயக்கத்தின் கோரிக்கைகள் அனைத்தும் செயல்முறையளவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆயினும் அரசு அதிகாரம் உறுதியாக முதலாளி வர்க்கத்தின் கைகளிலேயே இருந்து வருகிறது. இது எவ்வாறு நிகழ்ந்தது?

ஏகாதிபத்தியம் ஈட்டும் அதீத இலாபங்களிலிருந்த ஒரு பகுதியைப் பயன்படுத்தி ஆளும் வர்க்கம் பாட்டாளிகளுக்குக் கணிசமான சலுகைகளை வழங்கியுள்ளது. அவர்களிடையே பிரிவினைகள் ஏற்படுத்தி ஒருவரை மற்றவர் மீது மோதவிட்டு, பயிற்சி பெற்ற தொழிலாளியைப் பயற்சி பெறாதவர் மீதும், வெள்ளையரைக் கறுப்பர் மீதும் மோதவிட்டு, இவர்கள் அனைவரையும் முதலாளித்துவக் கருத்துகளின் செல்வாக்கின் கீழ் கொண்டு வந்துள்ளது.

> இங்கிலாந்து போன்ற நாடுகளின் உதாரணத்தை நினைவில் கொள்ளுங்கள். அங்கு முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் நடாத்தும் போராட்டம் எல்லா இடங்களிலும் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. ஆயினும் பாட்டாளி வர்க்கம் ஒன்றுபடாமல் கிடக்கிறது. அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முதலாளி வர்க்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளனர். அதன் வர்க்க உணர்வு, மூலதனத்தின் கருத்து நிலையாளர்களினால் களங்கப்பட்டுள்ளது. உழைக்கும் வர்க்கத்துக்குள்ளே இருக்கும் சலுகை பெற்ற பிரிவு ஒன்று, அதன் அணிகளைக் கைவிட்டு விட்டு ஓடுவதின் காரணமாகப் பாட்டாளி வர்க்கத்தின் வலிமை சிதறடிக்கப்படுகிறது. (லெனின் தொ.நூ.10 ப.60)

தொழிற்கட்சியும் தொழிற்சங்க அதிகார வர்க்கமும் தொழிலாளர்களிடையே முதலாளித்துவக் கருத்துநிலை பரப்பப்படுவதற்கான முதன்மையான வடிகால்களாக உள்ளன. தொழிற்கட்சிப் பிரமுகர்கள் கூறும் 'ஜனநாயக சோசலிசம்' என்பது குறிப்பில் உணர்த்துவது என்னவென்றால், நாடாளுமன்றச் சீர்திருத்தங்கள் மூலம் சோசலிசத்தை வென்றடையலாம் என்பதாகும். இந்த ஜனநாயக சோசலிசம் என்பது முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு உள்ள இன்னொரு பெயரே தவிர வேறல்ல. இவ்வகையில் தொழிற்கட்சியானது முதலாளித்துவத்தை தூக்கி நிறுத்தும் ஆதாரக் கயிறாக மாறியுள்ளது. ஏனெனில் இந்த அமைப்புக்குள்ளேயே பணியாற்றுவது என்று உறுதி பூண்டுள்ள இரண்டு கட்சிகளில் ஏதேனும் ஒன்று ஆட்சியில் இருந்து வரும்வரை, ஆளும் வர்க்கம் பாதுகாப்புடன் இருக்கும். இந்த அமைப்பின் மற்றொரு அம்சத்தை ஆய்வு செய்யும் பொழுது இது தெளிவாகும்.

*1823 – 30*ஆம் ஆண்டுகளில் குற்றவியல் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, மத்தியகால இரவுக் காவலாளிகளுக்குப் பதிலாக ஒரு புதிய காவல்படை (பொலிஸ்) உருவாக்கப்பட்டது. *1870 – 71*இல் புதிய முதலாளி வர்க்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அரசு இயந்திரத்தின் அதிகாரங்களை நடைமுறைப் படுத்துகின்ற காவல்படை, ஆயுதப்படைகள், நீதித்துறை, அதிகாரி வர்க்கம் ஆகியவற்றைக் கொண்டு வரும் வகையில் இராணுவமும் பொதுப்பணித்துறையும் திருத்தி அமைக்கப்பட்டன. அதுநாள் தொட்டு நாடாளுமன்றத்தின் அதிகாரம் தொடர்ந்து குறைந்து கொண்டே வர, காவல்படை, ஆயுதப்படைகள், நீதித்துறை, அதிகாரி வர்க்கம் ஆகியவற்றின் அதிகாரங்கள் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளன. சட்டமியற்றுவதும் விவாதம் நடாத்துவதும் மட்டுமே நாடாளுமன்றத்தின் பணிகளாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கோட்பாட்டளவில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம்தான் மிக உயர்ந்த அதிகாரமுடையது. ஆனால் நடைமுறையில் அதன் அதிகாரம் மிகவும் வரம்புக்குட்பட்டுள்ளது. தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்டபடையிலேயே ஒரு கட்சி பெரும்பான்மை பெற்று வெற்றியடைகிறது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதகளுக்கோ அரசாங்கத்துக்கோ இல்லை. அவற்றால் அவர்கள் கட்டுப்படுத்தப்படுவதில்லை. பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்வதற்குச் சட்டத்தில் இடம் இல்லை. நாடாளுமன்றத்துக்குள்ளேயே உண்மையான அதிகாரம் பிரதிநிதிகளுக்கு இல்லை. மாறாக அமைச்சரவைக்குத்தான் உண்டு. அமைச்சர்களோ, மூத்த அரசுப் பணி அதிகாரிகளிடமிருந்தே ஆலோசனைகள் பெறுகின்றனர். இந்த அதிகாரிகள் ஆளும் வர்க்கத்தால் பயிற்றுவிக்கப்பட்ட அதன் நம்பிக்கைக்குரிய ஊழியர்களாவர். மக்களால் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அல்லர். இந்த அமைச்சரவைக்கு உள்ளேயும் கூட தலைமை உறுப்பினர்கள் கொண்ட ஒரு சிறு குழு இருக்கிறது. இது உள் அமைச்சரவையாகும். இவர்கள் நெருக்கடி காலங்களில் வங்கி அதிபர்கள் மற்றும் இதர ஏகபோக முதலாளிகளைக் கலந்தாலோசித்து முக்கியமான முடிவுகளை எடுப்பார்கள். அரசு அதிகாரம் உண்மையில் இங்குதான் உள்ளது. இவ்வாறு, முக்கியமான பிரச்சினைகள் அனைத்தையும் வெறும் பரபரப்பூட்டும் செய்திகளாக்கியும், அவற்றை மிக அற்பமாகக் கருதும்படி செய்தும், மக்களின் மனங்களைக் தொடர்புச் சாதனங்களின் (பத்திரிகைகள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி முதலியவை) துணையுடன் மக்களின் ஒப்புதல் பெற்றே அரசாங்கம் நடத்தப்படுவதாக வெளியில் தோன்றும்படி செய்து, ஆளும் வர்க்கத்தினர் தமது சர்வாதிகார ஆட்சியைப் பேணிப் பாதுகாத்துக் கொள்கின்றனர். மக்கள் பணிந்திருக்கும் வரை இம்முறையில் ஆட்சி நடத்திச் செல்வதையே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் அவர்களது பொருளாதாரச் சலுகைகளைத் தட்டிக்கேட்கும் அளவுக்கு வலிமை பெற்ற மக்கள் இயக்கம் தோன்றியதுமே, 'சட்டம் ஒழுங்கு'க்கு ஆபத்து வந்துவிட்டதாகக் கூச்சலிட்டு, தாம் வழங்கிய நாடாளுமன்றச் சுதந்திரங்களை ஒழித்துக் கட்டிவிட்டு, ஒரு வெளிப்படையான சர்வாதிகார ஆட்சியை நிறுவுகிறார்கள்.

> நவீன அரசுகளின் அடிப்படைச் சட்டங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களது நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கூட்டம் கூடுவதற்கான சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் அல்லது 'சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்' என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வோரிடத்திலும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் போலித்தனத்தை நீங்கள் காண்பீர்கள். இப்போலித்தனம் வர்க்க உணர்வுடைய பாட்டாளி ஒவ்வொருவனுக்கும் பழக்கமான ஒன்று. எந்த ஒரு அரசும், அது எவ்வளவு ஜனநாயகத் தன்மை

வாய்ந்ததாக இருந்தாலும், தன் அரசியல் சட்டத்தில் ஓட்டைகளோ சிறப்பு அதிகாரங்களோ கொண்டிராமல் இராது. இந்த ஓட்டைகளும் சிறப்பு அதிகாரங்களும், 'பொது ஒழுங்கு மீறப்படும்' போது – அதாவது சுரண்டப்படும் வர்க்கம் தனது அடிமைத்தனத்தை 'மீறி', அடிமைகள் போலல்லாமல் நடக்கத் தலைப்படும் போது – தொழிலாளர்களுக்கு எதிராகத் துருப்புகளை அனுப்புதல், இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்துதல், இன்ன பிறவற்றை முதலாளி வர்க்கத்துக்கு உத்திரவாதம் செய்கின்றன." (லெனின் தொ.நூ.28 – பக்.244)

ஏகபோக முதலாளிகள் தங்களால் முடிந்தவரை எப்போதும் வெளிப்படையான பலாத்காரத்தின் மூலமாகவே காலனி நாடுகளை ஆண்டு வந்துள்ளனர். இங்கு அவர்கள் ஜனநாயக வேடத்தை மேற்கொள்ளவில்லை. இதற்கு அவர்கள் காட்டிய காரணம் காலனி நாட்டு மக்கள் 'தன்னாட்சி செய்வதற்கு இன்னமும் தகுதி பெறவில்லை' என்பதாகும். பிற்பாடு தேசிய இயக்கங்கள் சலுகைகள் வழங்குமாறு அவர்களை நிர்ப்பந்திக்கும் போது, தேசிய முதலாளி வர்க்கத்துக்குப் பெயரளவு சுதந்திரத்தை அவர்கள் வழங்குகின்றனர். அதன் பிறகு அவர்களின் கட்டுப்பாட்டின் கீழும் அவர்களது ஒத்துழைப்புடனும் தேசிய முதலாளி வர்க்கம் தனது சர்வாதிகாரத்தை நிறுவுகிறது.

மேலே கூறியவற்றிலிருந்து, முதலாளித்துவ ஜனநாயகத்துக்காகப் போராட்டம் நடத்துவது பயனற்றது என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. நிலப்பிரபுத்துவ எதேச்சாதிகாரத்துடன் ஒப்பிடுகையில் அது ஒரு முன்னேற்றக் கட்டத்தைக் குறிக்கிறது என்பது மட்டுமல்ல, தனது ஜனநாயக உரிமைகளை முழுமையாகப் பிரயோகிப்பதன் மூலமாகவே தொழிலாளர்களால் முதலாளித்துவ நாடாளுமன்ற முறையின் போலித்தனத்தை இனங்கண்டு கொள்ளவும், இதன் காரணமாக தொடர்ந்து அடுத்த போராட்டத்துக்கான தேவையை உணர்ந்து கொள்ளவும் முடியும்.

முதலாளித்துவ ஜனநாயகம் என்பது மத்தியகால அமைப்புடன் ஒப்பிடுகையில் ஒருபெரும் வரலாற்றுரீதியான முன்னேற்றமாக இருந்தபோதிலும், அது எப்போதும் வரம்புக்குட்பட்ட, முனை மழுங்கப்பட்ட, பொய்யான, போலியான ஜனநாயகமாகவே இருந்து வரும். முதலாளித்துவத்தின் கீழ் இப்படி இருந்தேதான் தீரும். அது பணக்காரர்களுக்கான ஒரு சொர்க்கம், சுரண்டப்படுபவர்களுக்கும் ஏழைகளுக்கும் அது ஏமாற்றி மாட்டவைக்கும் பொறியாகும், வெறும் மாயத் தோற்றமாகும். (லெனின் தொ.நூ.28 – பக்.243)

பழைய நாடாளுமன்ற நாடுகளில் உள்ள முதலாளி வரக்கம், மாய்மாலக் கலையிலும், மக்களை ஆயிரம் வழிகளில் ஏமாளிகளாகச் செய்யும் கலையிலும் அற்புதமான தேர்ச்சி பெற்றுள்ளது. முதலாளித்துவ ஜனநாயகத்தை 'பொதுவான ஜனநாயகம் அல்லது தூய்மையான ஜனநாயகம்' என்றும் இன்னபிற சொற்களையும் சொல்லியும் ஏமாற்றுகிறது. நாடாளுமன்றத்தை பங்குச் சந்தையுடனும் முதலாளிகளுடனும் பிணைத்திருக்கும் பல்லாயிரக்கணக்கான கயிறுகளைத் தந்திரமாக மூடிமறைக்கிறது. பணத்துக்குப் பல்லிளிக்கின்ற கூலிப் பத்திரிகைகளையும் பணத்தின் சக்தியையும் மூலதனத்தின் சக்தியையும் ஒவ்வொரு வகையில் பயன்படுத்தியும் இக்கலையில் தேர்ச்சி பெற்றுள்ளது. (லெனின் தொ.நூ.29 – பக்.561)

நாடாளுமன்றத்தின் மூலமாக மக்களை ஒடுக்கவும் நசுக்கவும் எந்த ஆளும் வர்க்க உறுப்பினரை சில ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுப்பது என்பதுதான் முதலாளித்துவ நாடாளுமன்ற நெறியின் உண்மையான சாரமாகும். இது நாடாளுமன்ற அரசியல் சட்டத்துக்குட்பட்ட முடியாட்சிகளுக்கு மட்டுமல்லாது, மிக உயர்ந்த குடியரசுகளுக்கும் பொருந்தும். (லெனின் தொ.நூ.25 – பக்.422)

மிக உயர்ந்த முதலாளித்துவ அரசியலும் கூட ஒடுக்கப்பட்ட மக்கள் ஒவ்வோர் கட்டத்திலும் 'ஜனநாயகத்தால்' பிரகடனப்படுத்தப்பட்டுள்ள **பெயரளவு** சமத்துவத்துக்கும் ஆயிரக்கணக்கான **உண்மையான** வரம்புகள், சூழ்ச்சிகள் ஆகியவற்றுக்குமிடையே உள்ள கடும் முரண்பாட்டை எதிர்நோக்குகின்றனர். இந்த முரண்பாடுதான் முதலாளித்துவத்தின் ஊழல் தன்மையை, மோசடித்தனத்தை, மாய்மாலத்தை பார்க்குமாறு மக்களின் கண்களைத் திறந்துவிடுகிறது. சோசலிசத்துக்காகப் போராடுபவர்களும் அதைப் பிரச்சாரம் செய்பவர்களும் புரட்சிக்கு மக்களை ஆயத்தம் செய்வதற்காக இந்த முரண்பாட்டைத்தான் இடைவிடாது அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (லெனின் தொ.நூ.28 – பக்.246)

மேற்கு நாட்டுத் தொழிலாளர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் உயர்ந்த வாழ்க்கைத்தரம், காலனி ஆட்சி அடிப்படையிலும் ஏகாதிபத்திய அடிப்படையிலும் வென்றெடுக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் இப்போது அந்த அடிப்படை நொருங்கிக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியச் சுரண்டலுக்குத் திறக்கப்பட்ட பகுதிகள் சுருங்கிவர, ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள தொழிலாளர்களைச் சுரண்டுவது கடுமையாகியுள்ளது. முதலாளித்துவ ஜனநாயகம் என்பது முதலாளித்துவ சர்வாதிகாரத்தை மூடி மறைக்கின்ற ஒன்று என்பது அம்பலமாகி வருகிறது.


(அயர்லாந்தில் பிறந்த பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சன் - 1903 – 1987 – பிரித்தானியாவின் பேர்மிங்காம் (Birmingham) பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியராவார். அத்துடன் பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் குழுவிலும் செயற்பட்ட ஒருவராவார்.

பல்துறை விற்பன்னரான அவர், கிரேக்க இலக்கியத்தைக் கரைத்துக் குடித்ததுடன், மார்க்சிய தத்துவார்த்தவாதியாகவும் திகழ்ந்தார். மார்க்சிசக் கண்ணோட்டத்தில் அவர் எழுதிய, From Marx to Mao tse tung, A studuy in revolutionary dialects, Capitalism and after, The rise and fall of commodity production, The human essence, The sources of science and art, Marxism and poetry என்பன பிரசித்தி பெற்ற நூல்களாகும்.

அத்துடன் 1970களில் பிரித்ததானியாவில் பல புத்திஜீவிகளால் நடாத்தப்பட்ட

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...**

# வடக்கின் உள்ளூராட்சித் தேர்தல் நிலைமை




**2018** பெப்ருவரி 10ஆம் நாளன்று இலங்கையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் வட மாகாணத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் பல்வேறு அணிகளாகக் களம் இறங்கியுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), தமிழர் விடுதலைக் கூட்டணி - ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இணைந்த அணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என்பன அவற்றுள் சிலவாகும். இவை தவிர தெற்கின் பிரதான கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சில தேசியக் கட்சிகளும் வடக்கில் போட்டியிடுகின்றன.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களை விட இம்முறை நடைபெறும் தேர்தல் வடக்கைப் பொறுத்தவரை சற்று வித்தியாசமான சூழலிலேயே நடைபெறுகின்றது. அதற்குக் காரணம், தமிழரசுக் கட்சியை பிரதான அங்கமாகக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழரசுக் கட்சி எடுத்துள்ள அரசியல் நிலைப்பாடாகும்.

மிக நீண்டகாலமாக தமிழ் தலைமைகள் தென்னிலங்கையில் இருந்த அரசுகளுக்கு எதிரான ஒரு தீவிர நிலைப்பாட்டையே தமது அரசியல் (தேர்தல்) உத்தியாகப் பயன்படுத்தி வந்தன. அவர்களது அந்த உத்தி தேசிய இனப் பிரச்சினையால் பாதிப்புக்குள்ளாகி இருந்த தமிழ் மக்கள் மத்தியில் நல்ல பலனைக் கொடுத்தது. அதன் காரணமாக நாடாளுமன்றத் தேர்தல்களின் போது அவர்களுக்கு அது நல்ல அறுவடையைக் கொடுத்து வந்துள்ளது.

**புனிதன்**

ஆனால் ஆர்.சம்பந்தன் தலைமையிலான தற்போதைய தமிழ் தலைமை 2015 ஜனவரி 8இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முதல் கொண்டு முன்னைய தமிழ் தலைமைகளிலிருந்து முற்றிலும் மாறுபாடான ஓர் அரசியல் நிலைப்பாட்டை மேற்கொண்டு வருகின்றது. அந்தத் தேர்தலின் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தற்செயலாகக் கிடைத்த உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி பதவியை வைத்துக்கொண்டும் கூட, தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் ஓர் அங்கத்துவக் கட்சி போலவே செயற்படுகிறது.

முன்னைய காலங்களிலும் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் தமது வர்க்க நிலைப்பாடு, ஏகாதிபத்திய சார்பு நிலை என்பன காரணமாக வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாகச் செயற்பட்டு வந்தாலும், இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமையைப் போல இவ்வளவு வெளிப்படையாகவும், நெருக்கமாகவும் அரசுடன் செயற்பட்டதில்லை.

முக்கியமாக கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோரின் தீவிரமான அரசு சார்பு நிலைப்பாடு, தமிழ் பொதுமக்கள் மத்தியிலும், பங்காளிக் கட்சிகள் மத்தியிலும் கணிசமான எதிர்ப்பலைகளைத் தோற்றவித்துள்ளது. அதன் காரணமாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப். அதிலிருந்து வெளியேறி இன்னொரு அணி அமைத்துப் போட்டியிடுகின்றது. எஞ்சியுள்ள புளொட், ரெலோ என்பனவும் தமிழரசுக் கட்சி மீது கடும் அதிருப்தியிலேயே இருக்கின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில் வடக்கின் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்ற எதிர்பார்ப்பு பலரின் ஆவலைத் தூண்டி விட்டுள்ளது.

மக்கள் இன்னமும் போதிய அரசியல் விழிப்புணர்வும், வரலாற்றுப் படிப்பினைகளையும் பெற்றுக் கொள்ளாததால், வழக்கம் போலவே தமிழரசுக் கட்சி தலைமைதாங்கும் அணி கூடுதலான வெற்றியைப் பெறும் என்ற கணிப்பே பலரிடம் காணப்படுகின்றது. அதற்குக் காரணம் “தமிழரின் ஒற்றுமையை ஓரணியாக நின்று உலகத்துக்குக் காட்ட வேண்டும்” என்ற மந்திர வார்த்தையை தமிழ்த் தலைமை எப்பொழுதும் பயன்படுத்தி வருவதுதான். இந்த வார்த்தைகளை அவர்கள் அரசை எதிர்த்துக் கொண்டும் பயன்படுத்தி இருக்கிறார்கள், அரசை ஆதரித்துக் கொண்டும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் மக்களோ அவர்களது இந்த இரட்டை நாடகத்தைக் கண்டும் காணாமல் இருக்கிறார்கள்.

இருப்பினும், இம்முறைத் தேர்தல் முடிவுகள் சற்று வித்தியாசமாக அமையக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் உண்மையான தமிழ் தேசியவாத சக்திகளிடமும், ஜனநாயக சக்திகளிடமும் ஓரளவு காணப்படுகின்றது. அதற்கு அரசியல் ரீதியான காரணிகளும், அமைப்புரீதியிலான காரணிகளும் ஏதுவாக உள்ளன.

அரசியல் ரீதியிலான காரணியை எடுத்து நோக்கும் போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசு சார்புப் போக்கை பல்வேறு தமிழ் தேசியவாத அணிகளும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள புலி சார்பு சக்திகளும் கடுமையாக எதிர்ப்பதால், அந்த எதிர்ப்பு மக்கள் மத்தியில் அரசியல் வினைத்திறனாக மாறி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான வாக்குகளாக மாறும் சாத்தியக்கூறு உண்டு.

அமைப்பு ரீதியிலான காரணியை எடுத்து நோக்கினால், இந்தத் தேர்தலில் போட்டியிடும் அணிகளில் ஈ.பி.டி.பி. கட்சியைத் தவிர்ந்த, மற்ற எல்லா அணிகளும் ஏதோ ஒரு வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையையே கொண்டிருப்பவை. அதுமட்டுமின்றி, அவற்றில் சில கட்சிகள் முன்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்தவை. சில கட்சிகள் அதில் அங்கம் வகிப்பதற்கு இப்பொழுதும் விரும்புபவை. சில தனிப்பட்ட அல்லது பதவி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே அவை தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி தனி அணியாகப் போட்டியிடுகின்றன. எனவே இந்த அணிகள் எல்லாமே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியைத்தான் பங்கிடப் போகின்றன. எனவே இதன் காரணமாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு, அது இத்தேர்தலில் பின்னடைவைச் சந்திக்கலாம்.

இத்தகைய ஒரு அரசியல் சூழ்நிலையில் வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக அல்லது ஒரு மாற்றாக எழுந்து நிற்கும் தனியொரு பிரதான அணியாக ஈ.பி.டி.பி. கட்சி மட்டுமே காணப்படுகின்றது. அப்படி அக்கட்சி காணப்படுவதற்கு வேறு சில காரணிகளும் உண்டு. அவையாவன: ஈ.பி.டி.பி. மட்டுமே பிற்போக்கு தமிழ் தேசியவாதத்தில் ஊறித்திளைக்காத ஒரேயொரு தமிழ் கட்சியாக இருக்கின்றது. அந்தக் கட்சி மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினையை வெறும் எதிர்ப்பு அரசியலால் மட்டும் தீர்க்க முடியாது எனக் கருதிச் செயல்பட்ட கட்சியாகும். அதன் காரணமாக முன்னைய சந்திரிக மற்றும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுகளில் அது அங்கம் வகித்ததுடன், தமிழ் மக்களின் அன்றாட அத்தியாவசியப் பிரச்சினைகள் பலவற்றையும் தீர்த்தும் வைத்தது. அதேநேரத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கும் ஆக்கபூர்வமான வழிகளில் முயற்சி செய்தது.

இன்று ஈ.பி.டி.பி. அரசில் அங்கம் வகிக்காத போதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்று அரசிடம் சோரம் போகாது தனது ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மூலம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக சுதந்திரமாகக் குரலெழுப்பி வருகின்றது.

இத்தகைய காரணிகளால் தனது தனித்துவமான வாக்கு வங்கியை இழக்காத ஒரு கட்சியாகவும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான உண்மையான ஒரு மாற்றாகவும் யதார்த்தத்தில் ஈ.பி.டி.பி. கட்சியே இருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது அவர்களுக்குப் புதுமையான ஒன்றல்ல. முன்னைய காலங்களிலும் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்த அதேநேரத்தில், தமது அன்றாட வாழ்வுடன் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிர்வாகங்களுக்கு பெருமளவுக்கு மாற்று அணியினரை, குறிப்பாக இடதுசாரிகளையே தமிழ் மக்கள் தெரிவு செய்திருக்கிறார்கள்.

உதாரணமாக, யாழ்ப்பாண மாநகர சபை, பருத்தித்துறை – வவுனியா நகர சபைகள், சங்கானை, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, மானிப்பாய், கிளிநொச்சி, மன்னார், சுன்னாகம் பட்டின சபைகள், கரைச்சி, புலோப்பளை, உடுப்பிட்டி, அளவெட்டி – மல்லாகம் கிராமசபைகள் என்பனவற்றுக்கு பெரும்பாலும் இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் மற்றும் சமசமாஜக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையே மக்கள் தெரிவு செய்தனர். அவர்களாலேயே ஊழலற்ற நிர்வாகத்தையும், உண்மையான அபிவிருத்தியையும் செய்ய முடியும் என மக்கள் நம்பியதன் காரணமாகவே அவ்வாறான தெரிவுகளை அவர்கள் மேற்கொண்டனர்

தற்போது நடைபெறப்போகும் உள்ளூராட்சித் தேர்தலும் ஆட்சி மாற்றத்துக்கான தேர்தல் அல்ல என்ற வகையில், முன்னைய கால உதாரணங்களைப் பின்பற்றி மக்கள் தமக்கு உண்மையான சேவையை ஆற்றக் கூடியவர்களைத் தெரிவு செய்தால், அது அவர்களது விவேகமான செயலாக இருக்கும். அந்த வகையில், மக்கள் இத்தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்து வாக்களிப்பது அவசியமானது.

---

5ம் பக்கத்தொடர்ச்சி…

சீனக் கொள்கை படிப்புக் குழுவிலும் (China Policy Study Group), அந்த அமைப்பால் வெளியிடப்பட்ட broad Sheet என்ற சஞ்சிகையிலும் முக்கிய பொறுப்புகளையும் அவர் வகித்தார்.

அவர் பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைச் செயற்குழுவில் இருந்த போது அக்கட்சி 1951இல் வெளியிட்ட "சோசலிசத்துக்கான பிரித்தானியப் பாதை" (The British Road to Socialism) என்ற கொள்கை அறிக்கையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற சொல் விடுபட்டிருந்த காரணத்தால் அந்த அறிக்கையை எதிர்த்து வாக்களித்ததுடன், பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியுடனான தொடர்புகளையும் அறுத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மார்க்சிய இலக்கிய விமர்சகர்களான பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோர் பிரித்தானியாவில் தமது பட்டப் பின் கலாநிதிப் படிப்பை மேற்கொண்ட போது தொம்சன் அவர்களே அவர்கள் இருவரையும் நெறிப்படுத்தியவராவார்.

மேலே பிரசுரிக்கப்பட்டுள்ள **"முதலாளித்துவ ஜனநாயகம்"** என்ற அவரது கட்டுரை **'முதலாளித்துவமும் அதன் பிறகும்'** என்ற அவரது நூலில் இருந்து எடுக்கப்பட்டதாகும் – வானவில்)

# தோழர் சே குவேராவின் கொள்கைப் பிடிப்புமிக்க உயிர்த்தியாகத்தின் 50ஆவது ஆண்டு நினைவு தினம்

ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த மருத்துவரான எர்னெஸ்ரோ சே குவேரா (Ernesto Che Guevera), ∴பிடல் கஸ்ட்ரோவுடனும் (Fidel Castro), ஏனைய புரட்சியாளர்ளுடனும் இணைந்து *1959*ஆம் ஆண்டு கியூபப் புரட்சியில் பங்கேற்ற மாபெரும் புரட்சியாளராவார். கியூபாவில் சோசலிச அரசு ஓரளவு உறுதிப்பட்ட பின்னர் அவர் கியூபாவில் தான் வகித்த சகல பதவிகளிலிருந்தும் விலகி தென் அமெரிக்காவின் வேறு சில நாடுகளில் புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகத் தலைமறைவாகச் சென்றார்.

அவ்வாறான நடவடிக்கைகளில் அவர் பொலிவியாவில் ஈடுபட்டிருக்கும் போது வலதுசாரி பொலிவிய அரசின் சி.ஐ.ஏ. பயிற்சி பெற்ற இராணுவத்தால் *1967* ஒக்ரோபர் 9இல் கைது செய்யப்பட்டு சித்திரவதையின் பின் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் கொல்லப்பட்டு 2017 ஒக்ரோபர் 9ஆம் திகதியுடன் 50 ஆண்டுகள் பூர்த்தி ஆகின்றன. அந்த மாபெரும் புரட்சியாளனை நினைவுகூரும் முகமாக அவர் கியூபாவை விட்டுப் புறப்படுவதற்கு முன்பதாக தனது நெருங்கிய தோழரான ∴பிடல் கஸ்ட்ரோவுக்கு இறுதியாக எழுதிய கடிதத்தை எமது வாசகர்களுக்காக கீழே தந்துள்ளோம்.

-'வானவில்' ஆசிரிய குழு

## ∴பிடல்,

இந்தத் தருணத்தில் நான் பல விடயங்களை நினைவு கூருகின்றேன். மரியா அன்ரோனியாவின் (Maria Antonia) வீட்டில் உங்களைச் சந்தித்த தருணத்தில், உங்களுடன் இணையுமாறு நீங்கள் அழைத்தபோது, அந்தத் தயாரிப்பின் போது எல்லாவிதமான பதட்டங்களும் சூழ்ந்து கொண்டன. நாம் தற்செயலாக இறக்க நேர்ந்தால் எமது மரணத்தை யாருக்கு அறிவிப்பது என்ற கேள்வி எழுந்த போது, நாம் எல்லோரும் உண்மையான நெருக்கடிக்கு ஆளானோம். ஒரு புரட்சியில் ஒருவர் வெற்றிபெறவோ அல்லது இறக்கவோ நேரிடலாம் என்ற உண்மையைப் பின்னர் நாம் விளங்கிக் கொண்டோம். வெற்றியை நோக்கிய



பாதையில் பல தோழர்கள் அவ்வாறு வீழ்ந்து மடிந்தனர்.

நாங்கள் இப்பொழுது கூடுதலாக முதிர்ச்சி அடைந்துவிட்டபடியால் எல்லாமே குறைந்தளவான நாடகப்பாணிக் குரலாக ஒலிக்கின்றது. ஆனால் சம்பவங்கள் தன்பாட்டில் மீண்டும் நிகழ்கின்றன. கியூப் புரட்சியில் அந்த மண்ணுடன் என்னை இணைத்த எனது கடமையில் ஒரு பகுதியை பூர்த்தி செய்துள்ளேன் என்ற மனநிறைவுடன் உங்களுக்கும், தோழர்களுக்கும், உங்கள் மக்களுக்கும் எனது பிரியாவிடையைச் சொல்ல விரும்புகிறேன்.

கட்சியின் தலைமையில் இருந்த பதவி, அமைச்சுப் பதவி, இராணுவத்தில் இருந்த தளபதி பதவி, எனக்கிருந்த கியூபப் பிரஜாவுரிமை என்பனவற்றிலிருந்து முறைப்படி நான் விலகிக் கொள்கிறேன். கியூபாவுடன் எனக்கு இனி சட்டபூர்வமான எந்தப் பந்தங்களும் இல்லை. இன்னொரு வகையில் மட்டும் இருக்கின்ற உறவை பதவிகளுக்கு நியமனம் செய்வதன் மூலம் உடைத்துவிட முடியாது.

எனது கடந்தகால வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கையில், புரட்சிகர வெற்றியை ஸ்திரப்படுத்துவதில் நான் போதியளவு உளப்பூர்வமாகவும் அர்ப்பணிப்புடனும் வேலை செய்துள்ளேன் என உணர்கின்றேன். எனது ஒரே பாரதூரமான தவறு என்னவெனில் Sierra Maestra இல் தொடங்கிய கணங்களிலிருந்து நான் உங்களில் அதிக நம்பிக்கை வைக்கத் தவறியதுடன், உங்களது புரட்சி மற்றும் தலைமைத்துவப் பண்புகளை விரைவாக உணரவும் தவறி விட்டேன்.

கரீபியன் (ஏவுகணை) நெருக்கடி (Caribbean Missile Crisis) ஏற்பட்ட அந்த துக்கமான நாட்களின் போது புத்திக்கூர்மையான எமது மக்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் உங்களுடன் அருகிலிருந்து செயற்பட்ட அந்த உன்னதமான நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன். அந்த நாட்களில் நீங்கள் மிகவும் திறமையான, அபூர்வமான ஒரு அரசுத் தலைவராகச் செயற்பட்டீர்கள். கொள்கைகளையும் அபாயங்களையும் சரியாகப் பார்த்து மதிப்பிடும் உங்கள் சிந்தனா வழிமுறையை எந்தவிதமான தயக்கமும் இன்றிப் பின்தொடர்வதில் எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெருமையாகவே கருதுகின்றேன்.

உலகிலுள்ள ஏனைய நாடுகளும் எனது அடக்கமான உதவிப் பணிகளை ஊக்கப்படுத்தின. நீங்கள் கியூபாவின் அரசுத் தலைவர் என்ற பொறுப்பில் இருப்பதால் உங்களால் செய்ய முடியாததை நான் செய்வதற்காக நாம் பிரிய வேண்டிய தருணம் வந்துள்ளது.

நான் இதைச் செய்வது ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியையும், இன்னொரு பக்கத்தில் கவலையையும் கொண்ட இரண்டுபட்ட மனநிலையில் என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு தூய்மையான அமைப்பாளன் என்ற வகையிலும், அன்பான ஒருவரின் அன்பைப் பெற்றிருக்கறேன் என்ற வகையிலுமே நான் இங்கிருந்து புறப்படுகிறேன். அத்துடன் என்னைத் தங்களது மகனாக ஏற்றுக்கொண்ட மக்களையும் பிரிந்து செல்கின்றேன். அது எனது உணர்வின் ஒரு பகுதியைக்

காயப்படுத்துகிறது. நீங்கள் எனக்கு கற்பித்த நம்பிக்கைகளுடனும், எமது மக்களின் புரட்சிகர உணர்வுகளுடனும், மிகவும் புனிதமான கடமைகளை நிறைவேற்றும் உணர்வுகளுடன், குறிப்பாக ஏகாதிபத்தியம் எங்கெல்லாம் வியாபித்திருக்கிறதோ அங்கெல்லாம் அதற்கு எதிராகப் போராட, நான் புதிய போர்க்களங்களை நோக்கிப் புறப்படுகின்றேன். இது ஒரு பலமாகவும், அதையும் விட ஆழமான வடுக்களை ஆற்றுவதாகவும் இருக்கும்.

கியூபாவின் அனுபவத்தை முன்மாதிரியாக எடுத்துக் கொள்வதைத் தவிர, அதனுடன் உள்ள மற்றைய பொறுப்புக்களிலிருந்தும் என்னை விடுவித்துக் கொண்டுள்ளேன் என்பதை மீண்டும் ஒருமுறை பிரகடனப்படுத்த விரும்புகிறேன். எனது கடைசி மணித்துளியை நான் இன்னொரு வானத்தின் கீழ் காணும் பொழுது எனது சிந்தனை இந்த மக்களைப் பற்றியதாகவும், குறிப்பாக உங்களைப் பற்றியதாகவும் இருக்கும். எனது நடவடிக்கைகளின் கடைசிக் கணங்கள் வரை நம்பிக்கையுடன் இருப்பதற்கு உங்கள் போதனைகளும் முன்னுதாரணமும் கிடைத்திருப்பதையிட்டு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது புரட்சியின் வெளிநாட்டுக் கொள்கையை நான் எப்பொழுதும் அடையாளம் கண்டு வந்துள்ளதுடன், அதைத் தொடரவும் செய்வேன். நான் எங்கிருந்தாலும் ஒரு கியூபப் புரட்சிவாதி என்ற எனது பொறுப்புணர்வை உணர்ந்து செயல்படுவதுடன், அதைப் பேணிப் பாதுகாக்கவும் செய்வேன். நான் எனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எந்தவொரு பொருளையும் விட்டுச் செல்லாதது குறித்து வருத்தப்படாதுடன், அந்த வழியில் செல்வதையிட்டு நான் மகிழ்ச்சியும் அடைகின்றேன். அரசாங்கம் அவர்கள் வாழ்வதற்காகவும், கல்வி கற்பதற்காகவும் போதியவற்றைச் செய்யும் என்பதால், நான் அவர்களுக்காக எதையும் கேட்கவில்லை.

உங்களுக்கும் எமது மக்களுக்கும் சொல்வதற்கு என்னிடம் பல விடயங்கள் இருந்தபோதிலும் அவை அவசியம் இல்லை எனக் கருதுகின்றேன். அவசரத்தில் கிறுக்கும் இந்தப் பக்கங்களில் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவனவற்றுக்கு என்னிடம் வார்த்தைகள் ஏதும் இல்லை.

**(ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு – தவம்)**

# உலக கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டம்

உலகம் முழுவதுமுள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 19ஆவது சர்வதேசக் கூட்டம் 2017 நொவம்பர் முற்பகுதியில் ரஸ்யாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உலகம் முழுவதுமிருந்து 102 கட்சிகளின் பிரதிநிதிக் குழுக்கள் பங்கேற்றன.

மாநாடு 2017 நொவம்பர் 1ஆம் திகதியிலிருந்து 3ஆம் திகதி வரை ரஸ்யாவின் லெனின்கிராட் நகரில் நடைபெற்றது. பின்னர 5 மற்றும் 7ஆம் திகதிகளில் மொஸ்கோ நகரில் தொடர்ந்து நடைபெற்றது.

19ஆவது சர்வதேசக் கூட்டத்தின் தொனிப்பொருளாக பின்வரும் தலைப்பு இருந்தது:
“மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் 100ஆவது ஆண்டு நினைவு தினம்: கம்யூனிஸ்ட் இயக்கத்தின் இலட்சியங்கள், ஏகாதிபத்திய யுத்தங்களுக்கு எதிரான மற்றும் சமாதானம், சோசலிசம் என்பனவற்றுக்கான போராட்டங்களுக்கு புத்துயிரூட்டல்”.

# தென்னாசிய இடதுசாரிக் கட்சிகளின் கூட்டம்

தென்னாசிய நாடுகளான இந்தியா, இலங்கை, பங்களாதேஸ், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இடதுசாரிக் கட்சிகளின் கூட்டம் இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள கொச்சி நகரில் 2017 செப்ரெம்பர் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தை இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்திருந்தது. கூட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரும், கேரள முதலமைச்சருமான பினராயி விஜயன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் 8 இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த 30 பிரதிநிதிகள் பற்கேற்றிருந்தனர்.

# தோழர் நடராசா ஜெகநாதன் காலமானார்!

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தோழர் நடராசா ஜெகநாதன் தமது 65ஆவது வயதில் அண்மையில் காலமானார் என்பதை மிகவும் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர் ஜெகநாதன் தமது பதின்ம வயதிலிருந்தே புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு செயற்பட்ட ஒருவராவார். ஆரம்ப காலத்தில் கிளிநொச்சி கோணாவிலில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய விவசாயப் பண்ணையில் அரசியல் பயற்சி பெற்றவர்களில் தோழர் ஜெகநாதனும் ஒருவராவார்.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தீவிரமடைந்து, அதனைத் தனியாகக் கையாள்வதற்காக இலங்கை மார்க்சிச – லெனனிச கம்யூனிஸ்ட் கட்சி 1975இல் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற தனியான அமைப்பை உருவாக்கிய போது அதன் முதலாவது மத்திய குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட பெருமையையும் தோழர் ஜெகநாதன் பெற்றிருந்தார்.

தாம் இறக்கும் வரை கொள்கை பிறழாது வாழ்ந்து வந்த தோழர் ஜெகநாதனின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் ‘வானவில்’ சார்பாக எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், தோழர் ஜெகநாதனுக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

**‘வானவில்’ ஆசிரியர் குழு**

# உள்ளூராட்சி தேர்தலின் பின் நாட்டில் அரசியல் – நிர்வாக ஸ்திரமின்மை உருவாகும் அபாயம்!

இலங்கையில் 2018 பெப்ருவரி 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர் நாட்டில் பெரும் அரசியல் – நிர்வாகச் சீர்குலைவும் அதனால் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையின்மையும் ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

அதற்குக் காரணம், 2015 ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலின் போதும் அதன் பின்னரும் நாட்டில் உருவாகி வந்த அரசியல் சூழ்நிலைகளே. 2015 ஜனவரி 8 ஜனாதிபதி தேர்தலின் போது மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையிலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் தமது நலன்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கிய சதித் திட்டத்துக்கு உதவியதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க, சந்திரிக குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஆட்சி மாற்றம் ஒன்றுக்கு வழிவகுத்தனர். நாட்டு மக்களில் பெரும்பான்மையோரின் விருப்புக்கு மாறாக உருவாக்கிய இந்த ஆட்சி மாற்றம் நாட்டை பல வழிகளிலும் சீரழித்துள்ளது.

**சயந்தன்**



இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டின் அரசியல், பொருளாதார, கலாச்சாரக் கொள்கைகள் வேகமாக மேற்கத்தையமயமாக்கப்பட்டு வருகின்றன. முன்னைய அரசால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் கைவிடப்பட்டுள்ளன. விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் ஏறியுள்ளன. பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாக்கள் வெளிநாட்டுக்கடன் அநியாய வட்டிக்குப் பெறப்பட்டுள்ளன. அவற்றுக்கான வட்டியைச் செலுத்துவதற்கு நாட்டின் வளங்கள் அந்நியருக்கு குறைந்த விலையில் தாரைவார்க்கப்படுகின்றன.

கல்வியைத் தனியார்மயப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் உயர்கல்வி நிலையங்களில் அமைதியற்ற நிலை தோன்றியுள்ளது. ஊடக சுதந்திரத்தை நசுக்க முயற்சிப்பதால் ஊடகத்துறை பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி நிற்கிறது.

'நல்லாட்சி' என்று சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்களின் ஆட்சியில் மத்திய வங்கி பிணைமுறி மோசடி உட்பட பலவிதமான ஊழல்களும் மோசடிகளும் ஏற்பட்டு நாட்டுக்கு பல்லாயிரம் கோடி ரூபா நஸ்டம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் – முஸ்லீம் மக்களுக்கு போலி வாக்குறுதிகளை வழங்கி அவர்களது வாக்குகளினால் ஆட்சிக்கு வந்த இன்றைய அரசாங்கம் அவர்களது எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்க முற்படவில்லை. தமக்கு எதிரானவர்களைப் பழி வாங்குவதிலேயே அரசாங்கம் முழுநேரமும் ஈடுபட்டு வருகின்றது.

இந்தச் சூழ்நிலைகளின் பிரதானமான காரணகர்த்தாக்கள் மைத்திரி, சந்திரிக இருவருமே. அவர்கள் இருவரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏகாதிபத்திய – எதிர்ப்பு, ஐக்கிய தேசிய கட்சி – எதிர்ப்பு கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, படுபிற்போக்கு வலதுசாரிக் கட்சியான ஐ.தே.கவுடன் சேர்ந்து ஆட்சி அமைத்ததின் மூலம் சுதந்திரக் கட்சிக்குத் துரோகம் இழைத்தனர். அதன் மூலம் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற ஒரு நிலையை உருவாக்கினர்.

ஆனால் நல்லவேளையாக சுதந்திரக் கட்சியின் உண்மையான கொள்கைகளையும் நாட்டையும் நேசித்த சக்திகள் மைத்திரி – சந்திரிக குழுவின் சதித் திட்டத்துக்கு உடன்படாததினால், அவர்கள் பொது எதிரணி என்ற ஒரு அணியை உருவாக்கி செயற்பட ஆரம்பித்தனர். அந்த அணி தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான சிறீலங்கா பொதுமக்கள் முன்னணி (SLPP) என்ற கட்சியின் சார்பில் தாமரை மொட்டுச் சின்னத்தில் இத்தேர்தலில் போட்டியிடுகின்றது.

இந்த அணியின் தோற்றத்தால் தென்னிலங்கை அரசியலில் புதிய நிலை ஒன்று தோன்றியுள்ளது. இவ்வளவு காலமும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற இரண்டு பிரதான போட்டி அணிகளும், மூன்றாவது ஸ்தானத்தில் ஜே.வி.பியும் இருந்து வந்தன. ஆனால் சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியின் வருகையுடன் இந்த நிலை மாற்றமடைந்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் ஐ.தே.கவின் பிரதான போட்டியாளன் சுதந்திரக் கட்சியா அல்லது பொதுமக்கள் முன்னணியா என்ற நிலை தோன்றியுள்ளது. அதேநேரத்தில் இவ்வளவு காலமும் மூன்றாவது நிலையில் இருந்த ஜே.வி.பி. நான்காவது நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய கள நிலவரப்படி ஐ.தே.க., சுதந்திரக் கட்சி என்பனவற்றை விட பொதுமக்கள் முன்னணிக்கே தென்னிலங்கை மக்கள் மத்தியில் அதிக ஆதரவு இருப்பதாகத் தெரிய வருகிறது. இருந்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் பல சபைகளில் ஐ.தே.க, சுதந்திரக் கட்சி, பொதுமக்கள் முன்னணி என்பன ஏறக்குறைய சமமான உறுப்பினர்களைப் பெறக்கூடும். அப்படியான ஒரு நிலை தோன்றுமாயின் உள்ளூராட்சி சபைகளில் நிரவாகத்தை அமைப்பதில் சிக்கல் தோன்றலாம்.

பல சபைகளில் இன்னொரு அணியின் ஆதரவுடனேயே நிர்வாகத்தை உருவாக்கக்கூடியதாக இருக்கும். அப்படியான சில சபைகளில் ஜே.வி.பியின் ஆதரவும் சில வேளைகளில் தேவைப்படலாம். அதேநேரத்தில் இந்த நிலைமையால் வேறு வகையான சிக்கல்கள் உருவாக வாய்ப்புண்டு.

அதாவது ஒரு சபையில் ஒரு கட்சி நிர்வாகத்தை அமைத்தால், சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படும் போது மற்றைய இரண்டு அணிகளும் இணைந்து அதைத் தோற்கடிக்கலாம். ஏற்கெனவே தென்னிலங்கையில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே சில சபைகளில் எதிர்க்கட்சியுடன் இணைந்து வரவு செலவுத் திட்டம் போன்ற முக்கிய விடயங்களில் ஆளும் கட்சியைத் தோற்கடித்த நிகழ்வுகள் அரங்கேறி இருக்கின்றன.

இது முன்னொருபோதும் இல்லாத நிலைமை. எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையுடன் நிர்வாகத்தை அமைக்க முடியாத நிலையை உருவாக்கிய பொறுப்பு சந்திரிக, மைத்திரி இருவரையுமே சாரும். அவர்கள் தமது சுயலாபம் கருதியும், மேற்கு நாடுகளின் சதிக்கு ஆளாகியும் சுதந்திரக் கட்சியில் ஏற்படுத்திய பிளவால்தான் இந்த நிலை தோன்றியுள்ளது.

அவர்கள் இருவரும் தனிப்பட்ட ஒரு மகிந்த ராஜபக்சவை பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு செய்த இந்தச் செயலால் நாட்டின் அடிமட்ட நிர்வாகத்தின் அத்திபாரமாகவும், ஜனநாயகத்தின் முதுகெலும்பாகவும் உள்ள உள்ளூராட்சி சபைகளில் ஒரு ஸ்திரமற்ற நிலையை உருவாக்கப் போகிறார்கள். இதனால் பாதிக்கப்படப் போவது அவர்கள் அல்ல. வழமைபோல சாதாரண மக்களே இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள்.

இதைத் தடுப்பதற்கான ஒரேயொரு வழி இத்தேர்தலில் உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியாகப் போட்டியிடும் உண்மையான சுதந்திரக் கட்சியினர், இடதுசாரிகள், தேசியவாதிகள் அடங்கிய சிறீலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு மக்கள் பெரும்பான்மையான ஆதரவை அளித்து அவர்கள் தலைமையில் இடையூறின்றி உள்ளூராட்சி சபைகளை இயங்க வைப்பதுதான். இல்லாவிடின் தற்பொழுது நாட்டில் உருவாகியுள்ள அரசியல் மற்றும் நிர்வாக ஸ்திரமின்மை மேலும் மோசமடையவே செய்யும்.

# தோழர் ஐயம்பிள்ளை சிற்றம்பலம் (பொன்னையா அண்ணை) மறைவுக்கு எமது அஞ்சலி!

யாழ்.மாவட்டம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முல்லைத்தீவு மாவட்டம் தண்ணீரூற்று கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான தோழர் ஐ.சிற்றம்பலம் அவர்கள் தமது 80ஆவது வயதில் காலமானார் என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழர் சிற்றம்பலம் கிளிநொச்சி மாவட்டம் இராமநாதபுரம் குடியேற்றத் திட்டத்தில் வாழ்ந்த காலத்தில், 1960 – 70களில் அங்கு செயற்பட்ட புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியியுடனும், அதன் தலைமையில் செயற்பட்ட செயற்பட்ட அகில இலங்கை விவசாயிகள் சம்மேளன இராமநாதபுர கிளையுடனும் நெருக்கமாகச் செயற்பட்ட ஒருவராவார்.

அமைப்பு சார்ந்த நடவடிக்கைகளில் பங்கேற்பதிலும், தோழர்களை உபசரிப்பதிலும், எப்போதும் ஆரவத்துடன் செயற்பட்ட தோழராவார்.

தோழர் சிற்றம்பலத்தின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ‘வானவில்’ சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அன்னாருக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**‘வானவில்’ ஆசிரியர் குழு**

# வறிய மாணவருக்கு கல்விவாய்ப்பு பெற்றுக் கொடுத்த பெருந்தகை

(*1884.10.13 அன்று பிறந்த இலவசக் கல்வியின் தந்தை சீ.டப்ளியூ.டப்ளியூ. கன்னங்கர அவர்களின் 133வது ஜனன தினத்தினை முன்னிட்டு இக்கட்டுரை தினகரனில் பிரசுரிக்கப்பட்டது.*)

மனிதனின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பெரும்பாலான மனிதர்களின் வாழ்வு பிறந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம் என்றபடி அமைந்துள்ளது. இவ்வாறு கோடானுகோடி மனிதர்கள் அன்று முதல் இவ்வுலகிற்கு வந்து சென்று விட்டார்கள். அவர்களது தடயமே இவ்வுலகில் இல்லை. அதேநேரம் சில மனிதர்களின் வாழ்வு மனித வரலாற்றில் அழியாத்தடம் பதித்தவையாக அமைந்திருக்கின்றது. அதற்கு அவர்கள் தம் வாழ்வுக் காலத்தில் ஆற்றிய அர்ப்பணிப்புகளும், பணிகளும், சேவைகளுமே காரணங்களாக அமைந்து இருக்கின்றன.

அந்தடிப்படையில், 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த இலங்கையில் பிறந்து 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையும் வாழ்ந்த கலாநிதி சீ.டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கர குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவர் ஆற்றிய பணிகளின் காரணமாக இந்நாட்டின் இலவசக்கல்வியின் தந்தையாக நோக்கப்படுகின்றார். அதேநேரம் உலகில் அதிக எழுத்தறிவு வீதம் கொண்டவர்கள் வாழும் நாடு என்ற பெருமையை இந்நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்த பெருமையும் அவரையே சாரும்.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதி வரையும் செல்வந்தர்களுக்கும், மேட்டுக்குடியினருக்கும் மாத்திரம் உரியதாக இருந்த கல்வி வாய்ப்பை இந்நாட்டிலுள்ள ஏழை, எளிய மக்களும் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தவர் அவராவார்.

### பிறப்பும் கல்வியும்:

இந்நாட்டு வரலாற்றில் தனி இடத்தைப் பிடித்துள்ள கிறிஸ்தோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கர, 1884 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி காலி மாவட்டத்திலுள்ள பலப்பிட்டிய, ரன்டம்பே என்ற இடத்தில் பிறந்தார்.
பலப்பிட்டிய நீதிமன்றத்தின் பிரதி பிஸ்கால் அதிகாரி ஜோன் டானியல் விஜேகோன் கன்னங்கர தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர், அன்று அக்கிராமத்தில் இயங்கிக் கொண்டிருந்த வெஸ்லியன் மிஷனரி பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். இவர் ஆரம்பக் கல்வியின் போதே கணித பாடத்தில் அதி திறமையை வெளிப்படுத்தியதன் விளைவாக அன்றைய தேசியப் பாடசாலையாக விளங்கிய காலி ரிட்ச்மண்ட் கல்லூரியில் கல்வி கற்பதற்கான புலமைப் பரிசில் அவருக்கு கிடைக்கப் பெற்றது.


இவர் கல்வியை நிறைவு செய்து வெளியேறியதும் இவரிடம் காணப்பட்ட திறமையின் பயனாக காலி ரிட்ச்மண்ட் கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றுக் கொண்டார். அத்தோடு மொரட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியிலும், கொழும்பு வெஸ்லி கல்லூரியிலும் இவர் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலப்பகுதியிலேயே சட்டத்துறையில் கற்ற இவர், 1910 ஆம் ஆண்டில் சட்டத்தரணியானார். அதேயாண்டில் எடித் வீரசூரியவுடன் திருமண வாழ்விலும் இணைந்தார்.

செயல்திறன் மிக்க சட்டத்தரணியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த இவர், சேர் டி.பி.ஜயத்திலக்க, டி.எஸ்.சேனநாயக்க, எப்.ஆர்.சேனநாயக்க, ஆதர் வி.டயஸ் போன்றோருடன் இணைந்து அநகாரிக தர்மபாலவின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க மதுஒழிப்பு இயக்கத்திலும் தீவிரமாகச் செயற்பட்டார்.

### அரசியல் பிரவேசம்:

இவ்வாறான சூழலில் 1915இல் ஏற்பட்ட கலவரம் அவரை தேசிய அரசியலுக்குள் கொண்டு வந்தது. அதற்கேற்ப கோல்புரூக் கமரூன் ஆணைக்குழுவின் சிபாரிசுப்படி அமைக்கப்பட்ட சட்ட நிரூபண சபையின் காலி ஆசனத்திற்காக 1923ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி நடாத்தப்பட்ட தேர்தலில் வெற்றி பெற்று உறுப்பினரானார். அதனூடாக அவர் நேரடி அரசியலில் பிரவேசித்தார்.

1931 ஆம் ஆண்டில் இலங்கை தேசியக் காங்கிரஸின் தலைவராகப் பதவி வகித்த இவர், டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு அமைய 1931 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரச பேரவைக்கான தேர்தலில் அதேயாண்டில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதேயாண்டில் கண்டி மாவட்டத்தின் ஹந்தஸ்ஸ என்ற இடத்தில் கிராம பாடசாலைத் திட்டத்தை அவர் அறிமுகப்படுத்தினார். அச்சமயம் இந்நாட்டு சனத்தொகையில் 12 வீதத்தினரே எழுத்தறிவு மிக்கவர்களாக இருந்தனர். இவர்களில் 62 வீதத்தினர் ஆண்களாகவும், 30.2 வீதத்தினர்



C. W. W. Kannangara

பெண்களாகவும் காணப்பட்டனர். இக்கல்வி முறைமை இந்தியாவில் வர்தா கல்வி முறைமை அறிமுகப்படுத்துவதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால் அவருக்கு இந்தியாவில் விஷேட கௌரவமும் அளிக்கப்பட்டது.

அதேவேளை 1936 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரச பேரவைக்கான தேர்தலிலும் போட்டியிட்டு அவர் வெற்றியீட்டினார். அத்தோடு இப்பேரவையின் கல்விக்கான நிறைவேற்றுக்குழுவின் முதலாவது தலைவராகவும், இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சராகவும் அவர் நியமிக்கப்பட்டார். இதற்கேற்ப இவர் தலைமையிலான கல்வி நிறைவேற்றுக் குழு இந்நாட்டில் புதிய கல்வி முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான புதிய ஒழுங்கு விதிகளை வகுத்தது.

இலவசக்கல்விக்கான அடித்தளம்:
இம்முறைமையின் ஊடாக நாட்டின் சகல பிள்ளைகளுக்கும் கல்வியில் சமவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதே இலக்காகக் கொள்ளப்பட்டது. ஏனெனில் அதுவரைக்கும் இந்நாட்டில் கல்வி வாய்ப்பு மேட்டுக் குடியினருக்கும், செல்வந்தர்களுக்கும் மாத்திரம் உரியதாக இருந்தது. அந்நிலையை மாற்றி ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி சகலரது பிள்ளைகளுக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதே இதன் இலக்காகக் கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் மத்திய வித்தியாலயங்களை ஆரம்பிக்கும் நடவடிக்கையை கன்னங்கரா ஆரம்பித்தார்.

அதற்கேற்ப, 1941 இல் மூன்று மத்திய

வித்தியாலயங்கள் முதலில் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் முதலாவது வித்தியாலயம் மாத்தளை அகுரம்பொடவில் தொடங்கப்பட்டது. இவ்வித்தியாலயங்கள் 1945 ஆம் ஆண்டாகும் போது 35 ஆகவும், 1950 இல் 50 வித்தியாலயங்கள் வரையும் அதிகரித்தன. இதேவேளை திறமைமிகு மாணவர்களுக்கான வருடாந்த புலமைப்பரிசில் திட்டத்தையும் 1943 இல் அவர் அறிமுகப்படுத்தினார்.

இவ்வாறான நிலையில், இலங்கைப் பல்கலைகழகம் அதன் முதலாவது பட்டமளிப்பு விழாவை 1942 இல் நடத்தியதோடு கன்னங்கரவுக்கு கலாநிதிப் பட்டத்தையும் வழங்கியது. இதேவேளை இலங்கையின் கல்வி நிலைமை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 1942 இல் கன்னங்கர தலைமையில் விஷேட கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. அக்கமிட்டியின் அறிக்கை 1943 இல் வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையில், 'முன்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும், ஆரம்பக் கல்வியின் போதனை மொழி தாய்மொழியாக இருக்க வேண்டும், ஆங்கிலம் மூன்றாம் மட்டம் முதல் சகல பாடசாலைகளிலும் கற்பிக்கப்பட வேண்டும், பிள்ளைகளின் அறிவியல் மற்றும் செயற்பாட்டு திறமைகளை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்' என்பன அச்சிபாரிசுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அவர் கல்வி அமைச்சர் என்ற வகையில் இந்த யோசனைகளை நடைமுறைப்படுத்தி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தார். குறிப்பாக அவர் இலவசக் கல்விச் சட்டத்தை அரச பேரவையில் நிறைவேற்றுவதற்காக கடுமையாக உழைத்தார். அதன்படி 1945 ஜூலை மாதம் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு, 1945 ஒக்டோபர் முதலாம் திகதி முதல் சகல மாணவர்களுக்கும் இலவசக்கல்வி என்ற திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

இலங்கைக்கு இலவசக் கல்வியை அறிமுகப்படுத்திய இவர், இந்நாட்டின் முதலாவது பல்கலைக்கழகத்தை ஆரம்பித்ததோடு, சுயமொழி கல்விக்கும் அடித்தளம் இட்டார். அத்தோடு நவீன உலகிற்கு தேவையான ஆங்கில மொழியைக் கற்கும்படி அவர் மாணவர்களிடம் கேட்டுக் கொண்டார். கன்னங்கர அறிமுகப்படுத்திய இலவசக் கல்வி திட்டத்தின் மூலம் நாட்டில் எல்லா மக்களும் நன்மை பெற்றனர்.

என்றாலும் 1947 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் தோல்வியுற்றார். அதனையடுத்து அவர் 1950 முதல் – 1952 வரையும் இந்தோனேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டார். இருப்பினும் 1952 இல் மீண்டும் அரசியலுக்கு வந்த அவர், அகலவத்த தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதனூடாக வீடமைப்பு மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

வரலாற்று முக்கியத்துவம் மிக்க கடிதம் 1956 ஆம் ஆண்டில் தீவிர அரசியலில் இருந்து ஒய்வு பெற்றார். அவர் சுகவீனமுற்று இருந்த இறுதிக் காலப்பகுதியில் தாம் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளை சுட்டிக்காட்டி பாராளுமன்றத்திடமிருந்து ஏதாவது உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அன்றைய சபாநாயகரான ஆர்.எஸ். பெல்பொலவுக்கு 1961 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி பின்வருமாறு கடிதமொன்றை எழுதினார்.

"முதலீடுகள் மூலமோ, வீடுகள் மற்றும் காணிகள் மூலமோ அல்லது வேறு மூலங்கள் ஊடகவோ தனிப்பட்ட வருமானங்கள் இன்றி எனது நண்பர்களதும், நலனோம்பாளர்களதும் அன்பளிப்புக்களில்தான் சில வருடங்களாக வாழ்கின்றேன். எனது ஆரோக்கிய நிலைமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான அத்தியாவசியமானவற்றுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை செலுத்தப்படாது குவிந்துள்ளது.

நண்பர்களிடமும் உறவினர்களிடமும் நிதியுதவியைப் பெறுவது என்பது ஒரு நூற்றாண்டின் மூன்றில் ஒரு பகுதியில் அரசாங்க அமைச்சராகப் பதவி வகித்த என் போன்ற ஒருவரின் கௌரவத்திற்கு அழகல்ல என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்கள் என நான் நம்புகின்றேன்.

சுமார் கால் நூற்றாண்டு காலம் சகலரும் ஆச்சரியப்படத்தக்க வகையில் நாட்டுக்காக ஆற்றிய சேவைகள் சகலரதும் அங்கீகாரத்திற்கும், பாராட்டுதல்களுக்கும் உள்ளாகும் என நான் நம்புகின்றேன். அதனால் எனது தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் மூலம் உடனடி நிவாரணமொன்றை எனக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்திய பாராளுமன்றம் பத்தாயிரம் ரூபாவை நன்கொடையாகவும், மாதா மாதம் ஐநூறு ரூபாவைக் கொடுப்பனவாகவும் வழங்க அங்கீகாரம் வழங்கியது. அவர் இறுதிக் காலம் வரையும் இக்கொடுப்பனவில்தான் தங்கி இருந்தார். இலங்கைப் பாராளுமன்றத்தின் ஊடாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்ட முதலாவது நபர் இவரேயாவார். அவர் 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி காலமானார்.

இந்நாட்டின் கல்வித் துறை மறுமலர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் அபரிமித சேவைகள் ஆற்றி சுதந்திர இலங்கையின் வரலாற்றில் தனியிடத்தைப் பிடித்திருக்கும் இவரது இறுதி காலம் இவ்வாறுதான் அமைந்திருந்த்து. அன்று அவர் கல்வியைச் சகலரும் இலவசமாகப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்ததன் பயனாகவே இன்று 92 வீதத்தினர் இந்நாட்டில் எழுத்தறிவு மிக்கவர்களாக விளங்குகின்றனர். அத்தோடு உலகில் எழுத்தறிவு வீதம் கூடிய முன்னணி நாடாகவும் இலங்கையால் திகழ முடிந்துள்ளது.

**-மர்லின் மரிக்கார்**
**(நன்றி: தினகரன்)**

# சுகாதார அமைச்சரின் மாயாஜாலம்!

**இ**லங்கையின் சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன தமாசாகப் பேசுவதில் மாத்திரம் கைதேர்ந்த பேர்வழியல்ல, செய்கையிலும் அவ்வாறானவர் என்பதை அண்மையில் நிரூபித்திருக்கிறார்.

அப்படி என்னதான் செய்துவிட்டார்? 2016 ஒக்ரோபர் 21ஆம் திகதி 48 அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் விலைகளை குறைத்திருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தார். குறைக்கப்பட்ட விலைகளின் அடிப்படையில் மருந்துப் பொருட்களை விற்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எச்சரிக்கையும் கூடவே விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இவ்வருடம் (2017) டிசம்பர் மாதம் 14ஆம் திகதி அந்த 48 அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதே சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவினால் அறிவிக்கப்பட்டுள்ளது!

உள்ளூராட்சித் தேர்தலை அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சிகள் இரண்டும் அச்சத்துடன் எதிர்நோக்கியிருக்கும் நேரத்தில் அமைச்சரின் இந்த விலை அதிகரிப்பு தமக்குப் பாதகமான விளைவை ஏற்படுத்தலாம் என அக்கட்சிகள் அச்சமடைந்துள்ள நிலையில்தான் இந்த விலை அதிகரிப்பு அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் நமது சுகாதார அமைச்சர் அதற்கெல்லாம் கவலைப்படுபவர் அல்ல. அவருக்கு மக்கள் ஆதரவு என்பதை விட வியாபாரம்தான் முக்கியம்.

# சீனா இன்று!

**மருதன்**

**வ**ரலாற்றில் முதல்முறையாக 'இன் தி நேம் ஆ∴ப் பீப்பிள்' (In the Name of People) என்னும் சீனத்தொடர், நெட்∴பிளிக்ஸ் (Netflix) சீரியல்களுக்குப் போட்டியாக உலகை ஆண்டு கொண்டிருக்கிறது. டிகிடிதூடி என்னும் இணையச் சேவையில் 55 எபிசோடுகள் வெளிவந்த இத்தொடரை 55 பில்லியன் பேர் இதுவரை கண்டுகளித்திருக்கிறார்கள்.

சீனாவின் சாதனைகளையும் சறுக்கல்களையும் மதிப்பிட ஒரேவழி, திறந்த மனதுடன் அந்நாட்டை அணுகுவதுதான். "ஒரே ஒருமுறை சீனா சென்று திரும்பினால் போதும், அந்நாடு குறித்து மீடியாவில் வரும் பெரும்பாலான செய்திகள் பிழையானவை என்பது உங்களுக்குத் தெரிந்துவிடும்" என்கிறார் ஸ்காட் யங் என்னும் அமெரிக்க இளைஞர். "சீனா பகுதியளவில் சுற்றுச்சூழல் மாசால் சீர்கெட்டிருப்பது உண்மை. ஆம், என்னால் அங்கே ∴பேஸ்புக் (Facebook) பார்க்க முடியவில்லை. ஆம், சீனமொழி கற்பதற்குக் கடினமானது. ஆனால் பல பகுதிகளில் சுத்தமான காற்றை நான் சுவாசித்தேன், இணையத்தை உபயோகித்தேன், மண்டரின் ஓரளவு கற்றுக் கொண்டேன். சீனர்களுக்கு வெளிநாட்டினரைப் பிடிக்காது என்று எச்சரித்து அனுப்பினார்கள். நான் போன முதல் நாளே நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டேன். சீனாவில் சுதந்திரமாக இருக்க முடியாது என்றார்கள். நான் மூன்றுமாத காலம் சீனாவை அச்சமின்றிச் சுற்றி வந்தேன். சீனர்கள் வெளிப்படையாக இருக்கமாட்டார்கள் என்றார்கள். கம்யூனிசம் குறித்து என்னால் சீனர்களுடன் விவாதிக்க முடிந்தது. மொத்தத்தில் நான் தெரிந்து கொண்டது ஒன்றுதான். சீனா பற்றிச் சொல்லப்படுவது அனைத்தும் அரை உண்மை அல்லது முழுப்பொய்."

சீனாவின் பாய்ச்சல்கள் மறுக்க முடியாதவை. அமெரிக்காவோடு நேருக்குநேர் நின்று போட்டிபோடும் பொருளாதார ஆற்றலைக் கொண்டிருக்கும் ஒரே நாடு சீனா மட்டுமே என்பதை அந்நாட்டை விரும்புபவர்கள் மட்டுமல்ல, வெறுப்பவர்களும் கூட ஒப்புக்கொள்கிறார்கள். ஒரு சராசரி சீனரின் சொத்து 2006-ல் இருந்ததைவிட 2016-ல் இரண்டு மடங்காகப் பெருகியுள்ளது. சீன அரசின் முனைப்பான திட்டங்களே இதற்கு முழுமுதல் காரணம். போகிறபோக்கில் எந்தவொரு திட்டத்தையும் அங்கே அரசியல்வாதிகள் அறிவிப்பதில்லை. அறிவித்து முடித்த கையோடு எந்தவொரு திட்டத்தையும் அவர்கள் மறந்துவிடுவதும் இல்லை. எத்தனை கடினமானதாக இருந்தாலும் சரி, அறிவித்த திட்டத்தை நிறைவேற்றி முடித்தபிறகே மறுவேலை பார்க்கிறார்கள். ஓர் உதாரணம்... சீனாவின் பொருளாதாரக் கட்டுமானத்தையும் அந்நாட்டின் வருமான புள்ளிவிபரங்களையும் ஆராய்ந்த நிபுணர்கள், சீனாவின் பலம் அதிகரிக்க வேண்டுமானால் உற்பத்தித் துறையிலிருந்து சேவைகள் துறைக்கு நாட்டை நகர்த்திச் சென்றாக வேண்டும் என்றொரு கருத்தைச் சொன்னார்கள்.



சரி... எதிர்காலம் என ஒன்று வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிடாமல் உடனே அந்தக் கருத்தை அள்ளியெடுத்துக் கொண்டு செயல்பட அரம்பித்துவிட்டது சீன அரசு. இன்று சீனா குறிப்பிடத்தக்க அளவுக்குச் சேவைகள் துறை பக்கம் நகர்ந்து வந்துவிட்டது. அதுமட்டுமின்றி, அத்துறையில் சாதனையும் படைத்திருக்கிறது. மற்ற நாடுகளைப்போல் அல்லாமல், சீனா தன் காதுகளையும் கண்களையும் எப்போதும் திறந்து வைத்திருப்பதால் மட்டுமே இந்தச் சாதனை சாத்தியமாகியிருக்கிறது.

சமீப காலமாக சீனாவில் எழுதப்பட்டுவரும் அறிவியல் புனைகதைகளை உலகம் ஆர்வத்துடன் வாசிக்கிறது. முழுக்கச் சொந்தத் தயாரிப்பில் ஒரு பெரிய பயணிகள் விமானத்தை (சி919) உருவாக்கிவிட்டது சீனா. மற்றொரு பக்கம் விண்வெளி ஆய்வுகளிலும் செயற்கை அறிவாற்றல் துறையிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

மருத்துவம், சுகாதாரம் இரு துறைகளிலும் திருப்திகரமான மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது சீனா. ஐந்து வயதைத் தொடுவதற்குள் இறந்துபோகும் சீனக் குழந்தைகளின் எண்ணிக்கை 2006 வாக்கில் 2.19 சதவிகிதமாக இருந்தது. பத்தாண்டுகளில் இந்த எண்ணிக்கை பாதியாகிவிட்டது.

சீனர்களில் கிட்டத்தட்ட சரி பாதியினர் இன்று மொபைல் மூலம் இணையத்தைப் பாவிக்கிறார்கள். பத்தாண்டுகளுக்கு முன்பு, மூவரில் ஒருவரிடம் மட்டுமே மொபைல் இருந்தது. பத்துபேரில் ஒருவர் மட்டுமே இணையத்தை உபயோகித்து வந்தனர். சென்றவாரம் வந்த ஓர் அறிவிப்பு இது, 'நாம் ஏன் விக்கிப்பீடியாவைச் சார்ந்திருக்க வேண்டும்? நமக்கான விக்கிப்பீடியாவை நாமே உருவாக்கிக் கொள்வோம், வாருங்கள்' அநேகமாக இன்னும் சில மாதங்களில் இந்த வேலை முடிந்துவிட்டிருக்கும்.

தங்களால் எதையும் சாதிக்கமுடியும் என்று சீனர்கள் நம்புகிறார்கள். தங்களை வெற்றிபெற்ற தேசமாக அவர்கள் கனவு காண்கிறார்கள். கொடூரமான வரட்சிகளையும் ஏழ்மைகளையும் அந்நிய ஆக்கிரமிப்புகளையும் முறியடித்து, கடும் தியாகங்கள் புரிந்து, ஈட்டிய கடந்தகால வெற்றிகளை அவர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள். எந்த இடர்ப்பாட்டையும் தாண்டிச்செல்ல முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

"நான் ஒருவேளை செல்வந்தராக இருந்தால், இந்தியாவில் பிறக்கவே விரும்புவேன். இங்கே என்னால் தொல்லையின்றி நிம்மதியாக வாழ முடியும். அரசு என் வாழ்வில் குறுக்கடுமா, என் சொத்துக்களை அபகரித்துக் கொள்ளுமா என்றெல்லாம் நான் அஞ்சவேண்டியதில்லை. என் அனுமதியின்றி என்னிடம் எதுவும் பறிக்கப்படமாட்டாது. ஆனால், ஏழையாக இருக்க வேண்டுமானால், நான் சீனாவில் பிறக்கவே விரும்புவேன். அங்கே என் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும். உணவு, இருப்பிடம், கல்வி, மருத்துவம், சுகாதாரம் எதைப்பற்றியும் நான் கவலைப்பட வேண்டியதில்லை. ஜனநாயகம் பற்றியெல்லாம் அநாவசியமாகக் கவலைப்படாமல் நிம்மதியாக என் வாழ்வை நடத்தலாம்" என்பது சீனாவில் பல காலம் வாழ்ந்த இந்திய பத்திரிகையாளர் ஒருவரின் கருத்து.

உண்மைதானே!

**(இக்கட்டுரை 'கல்கி' வார இதழில் மருதன் என்பவர் எழுதிய கட்டுரையின் முக்கிய பகுதிகளாகும் - நன்றி: கல்கி)**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

பல்லாயிரம் கோடி ரூபாவை வெளிநாடுகளிடமிருந்து கடனாகப் பெற்று நாட்டு மக்களை மேலும் கடனாளிகளாக்கியமை, நாட்டின் வளங்களை அந்நியருக்கு அறாவிலையில் தாரைவார்த்தமை, விலைவாசிகளையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதிகரித்தமை, எதிர்க்கட்சியினர் மீது பல போலிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வழக்குகள் தொடர்ந்தமை, தமது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடும் அரச ஊழியர்கள், தனியார்துறைத் தொழிலாளர்கள், மாணவர்கள் மீது அடக்குமுறையை ஏவி விட்டமை போன்ற விடயங்களைச் சாதித்தமைதான்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களது நீண்டகாலக் கோரிக்கையான இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு வாக்குறுதி அளித்தபடி எவ்வித பூர்வாங்க நடவடிக்கையும் கூட இதுவரை எடுக்கப்படவில்லை. அதுமட்டுமில்லாமல் போரினால் உருவான காணாமல் போனோர் விவகாரம், இராணுவத்தினர் கையகப்படுத்திய பொதுமக்களின் காணி விவகாரம், நீண்டகாலமாக விசாரணையின்றி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் விவகாரம், மீள் குடியேற்றம் மற்றும் புனர்நிர்மாண விவகாரம் போன்ற விடயங்கள் கூட யுத்தம் முடிவடைந்து 9 வருடங்கள் கடந்தும் தீர்வுகாணப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரப்படுகின்றது.

இவையெல்லாவற்றையும் விட இந்த 'நல்லாட்சி' அரசாங்கத்தின் மிகப்பெரிய சாதனை வரலாற்றில் முன்னொருபோதும் இடம் பெறாத வகையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமையாகும். முன்னைய ராஜபக்ச அரசு ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதாகச் சொல்லிப் பதவிக்கு வந்தவர்கள், பதவிக்கு வந்த ஒரு வருட காலத்திலேயே மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா பண மோசடியில் ஈடுபட்டார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்ட அவரது நண்பர் அர்ஜூனா மகேந்திரன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி தனது மருமகனின் நிறுவனம் ஒன்றின் மூலம் நாட்டு மக்களுக்குச் சொந்தமான பல ஆயிரம் கோடி ரூபாக்களை சூறையாடியுள்ளார். இந்த மோசடியில் பிரதமர் ரணில் உட்பட ஐ.தே.கவின் பல பெரும் புள்ளிகளுக்குப் பங்குண்டு என்பதை 'கோப்' விசாரணை அறிக்கையும், ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழு விசாரணை அறிக்கையும் அம்பலத்துக்குக் கொண்டு வந்துள்ளன. இருந்த போதிலும் பிரதமர் ரணிலும் அவரது ஐ.தே.கவினரும் தாம் குற்றமற்றவர்கள் எனக் கூறி முழுப் பூசனிக்காயை ஒரு கவளம் சோற்றுக்குள் மறைக்க முயல்கின்றனர்.

பிரதமரும் ஐ.தே.வினரும் தமது மீதான குற்றச்சாட்டுகள் வெளியானவுடனேயே சுதந்திரமான சுயாதீனமான விசாரணைக்கு இடமளித்து தார்மீக ரீதியில் பதவி விலகி இருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் 'யார் என்ன சொன்னாலும் நாங்கள் பதவி விலக மாட்டோம்' என்ற கணக்கில் இன்றுவரை பதவியில் அழுங்குப்பிடியாக ஒட்டிக்கொண்டு இருக்கின்றனர். இதுதான் இந்த நல்லாட்சி அரசாங்கத் தலைவர்களின் இலட்சணமாக இருக்கின்றது.

அதேநேரத்தில் கடந்த மூன்று வருடங்களாக வெளிநாட்டு எஜமானர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அரசாங்கத்தின் உயர்மட்டம் மேற்கொண்ட அனைத்துவிதமான ஊழல்களையும் மோசடிகளையும் தெரிந்தும் அவற்றைத் தடுத்து நிறுத்தாமல் கண்ணை மூடிக்கொண்டு இருந்த ஜனாதிபதி மைத்திரியும் அவரது கட்சியினரும் கூட இந்த விவகாரத்தில் குற்றவாளிகள்தான். இவ்வளவு காலமும் தூங்கிக் கொண்டு இருந்த அவர்கள் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ள நேரத்தில் மட்டும் விழித்துக் கொண்டவர்கள் போல நடிப்பது ஏற்கக் கூடியது அல்ல. அது மக்களைத் திசை திருப்பும் ஏமாற்று வேலையாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இன்றைய அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணை முழுமையாகத் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதையே அரச பங்காளிக் கட்சிகள் இரண்டினதும் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

எனவே நாட்டில் நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கிற அனைத்து மோசடிகள் ஊழல்களுக்கும் ஜனாதிபதி, பிரதமர் உட்பட முழு அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டும். அதன் அடிப்படையில் நாட்டில் 'நல்லாட்சி'யை மட்டுமல்ல, சாதாரண ஆட்சியைக் கூட நடாத்தத் தகுதி இழந்துவிட்ட இன்றைய அரசாங்கம் முழுமையாக பதவி விலகி புதிதாக ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் நடாத்துவதற்கு வழிவிட வேண்டும். அதேநேரத்தில் இந்த அரசாங்கத்தின் கீழ் நடைபெற்ற அனைத்து ஊழல் மோசடிகளையும் பக்கச்சார்பின்றி விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் வகையில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் உள்ளடக்கிய சுதந்திரமான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு துரிதமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் பெப்ருவரி 10 இல் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை நாட்டு மக்கள் ஒரு கருத்துக் கணிப்பாக நினைத்து அரசுக்கு எதிராக, அதாவது அரசின் இரண்டு பங்காளிக் கட்சிகளுக்குமெதிராக ஏகோபித்த முறையில் அணிதிரண்டு தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.

---

"மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கோட்பாடு அனைத்தையும் தழுவியதாக பிரயோகிக்கப்படக் கூடியது. நாம் அதை வறட்டுக் கோட்பாடாக அல்ல, செயலுக்கு ஒரு வழிகாட்டியாகக் கருத வேண்டும். மார்க்சியம் – லெனினியத்தைப் படிப்பது என்பது வெறும் சொற்களையும் சொற்றொடர்களையும் படிக்கும் விசயமல்ல. பதிலுக்கு அதைப் புரட்சியின் விஞ்ஞானமாகப் படிக்க வேண்டும். அது மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் யதார்த்த வாழ்வையும், புரட்சி அனுபவத்தையும் விரிவாகப் படித்து, அதிலிருந்து வகுத்துத் தந்த பொது விதிகளைப் புரிந்து கொள்ளும் ஒரு விசயம் மட்டுமல்ல. பிரச்சினைகளை ஆராய்வதிலும் தீர்ப்பதிலும் அவர்களுடைய நிலைப்பாட்டையும், வழிமுறையையும் கிரகித்துக் கொள்ளும் ஒரு விசயமுமாகும்."

***-மா சே துங்***

**(தேசிய யுத்தத்தில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பாத்திரம் – அக்டோபர் *1938*)**

# அடிக்கல்லை கடலில் வீசிய ‘நல்லாட்சி’ அரசாங்கம்!

மகிந்த ராஜபக்ச தலைமையிலான முன்னைய ஆட்சிக்காலத்தில் சீன அரசாங்கத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை ஆரம்பிக்கப்படுவதற்காக சீன ஜனாதிபதி சி ஜின்பிங் இலங்கை வருகை தந்தபோது நாட்டப்பட்ட அடிக்கல்லை தற்போதைய அரசாங்கம் பிடுங்கி கடலில் வீசியுள்ளதாகத் தெரிய வருகிறது. அதற்கான காரணம் இந்த அடிக்கல்லில் சீன ஜனாதிபதியின் பெயருடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தமையே.

ஆட்சியில் இருக்கும் போது ஒரு ஆட்சித் தலைவர் நாட்டும் அடிக்கல்லை பின்னர் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் அகற்றும் இந்த மாதிரியான அநாகரிகச் செயல் முன்னொருபோதும் எந்த நாட்டிலும் நடந்ததில்லை. முதல் தடவையாக இந்த ‘நல்லாட்சி’யில்தான் இந்த இழிவான செயல் நடத்தப்பட்டிருக்கிறது. மகிந்த ராஜபக்சவின் செல்வாக்கை ஒழிப்பதாக நினைத்துக் கொண்டு இந்த இழிவான செயலைச் செய்துள்ளார்கள். இது சீப்பை ஒளித்து வைப்பதன் மூலம் கலியாணத்தை நிறுத்தலாம் என நினைத்துச் செய்யும் முட்டாள்தனமான செயலாகும்.

தற்போதைய மேற்கத்தைய சார்பு அரசாங்கத்தின் சீனாவை அவமரியாதைப்படுத்தும் இந்த நடவடிக்கையால் இலங்கை சீன உறவில் பாரிய விரிசல் ஏற்படலாம் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எச்சரித்துள்ளது.

சிறிது நாட்களுக்கு முன்னர்தான் இலங்கையின் பொறுப்பற்ற வெளிவிவகாரக் கொள்கையின் விளைவாக ரஸ்யா இலங்கையிலிருந்து அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை உட்பட விவசாயப் பொருட்களுக்குத் தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது. சில மாதங்களுக்கு முன்னர் மலையகத்தில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயரையும் இந்த அரசாங்கத்தின் சில மலையக அடிவருடிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ‘நல்லாட்சி’ அரசாங்கம் மாற்றியது. அதற்கு மலையக மக்களிடமிருந்து பாரிய எதிர்ப்பு கிளம்பியது. அதுமாத்திரமின்றி இந்திய அரசாங்கமும் அசாங்கத்தின் இந்தச் செயலுக்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்தது.

இப்படியாக இன்றைய மேற்கத்தைய சார்பு மைத்திரி – ரணில் வலதுசாரி அரசாங்கம் தனது நெருங்கிய நட்பு நாடுகளான இந்தியா, சீனா, ரஸ்யா போன்ற நாடுகளுடன் விரோதத்தை வளர்த்து வருகிறது. இதன் மூலம் இலங்கையின் வளர்ச்சிக்கு பாரிய பின்னடைவை இந்த அரசாங்கம் ஏற்படுத்தி வருகிறது.

**-பி.வீரசிங்கம்**

# அரசியல் அமைப்புச் சபையிலிருந்து முன்னாள் நீதியமைச்சர் விலகினார்!

அரசியல் அமைப்புச் சபையிலிருந்து முன்னாள் நீதி அமைச்சரும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாச ராஜபக்ச விலகுவதாக அறிவித்துள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை அவர் சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ளார்.

அரசியல் அமைப்புச் சபைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே விஜயதாசவை நியமித்திருந்தார். ஆரம்பத்திலிருந்தே இன்றைய சூழலில் நாட்டுக்கு புதிய அரசியல் அமைப்பு ஒன்று தேவையில்லை என விஜயதாச ராஜபக்ச வலியுறுத்தி வந்தார்.

முன்னைய ராஜபக்ச அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து இன்றைய அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வந்ததில் விஜயதாசவுக்கு மிக முக்கிய பங்குண்டு. அதன் காரணமாகவே அவருக்கு முக்கிய அமைச்சான நீதி அமைச்சு வழங்கப்பட்டது.

ஆனால் எப்பொழுதும் வெளிப்படையாகப் பேசும் விஜயதாச ராஜபக்ச, இந்த அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை வெளிப்படையாக விமர்சித்ததின் காரணமாக அவர் மீது அவரது ஐ.தே.க. தலைமை நடவடிக்கை எடுத்தது. அவர் தனது செயலுக்கு மன்னிப்பு கேட்க மறுத்ததினால் அவரை அமைச்சரவையிலிருந்து நீக்கும்படி ஐ.தே.க. ஜனாதிபதிக்கு சிபார்சு செய்தது. தான் பதவி விலக்கப்படுவதை விரும்பாத விஜயதாச தானாகவே முந்திக்கொண்டு தனது அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்து கொண்டார்.

நாட்டின் முக்கிய பதவியான பிரதமர் ஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் ரணில் போன்றவர்கள் மத்திய வங்கி பிணை மோசடியில் சம்பந்தப்பட்டதாக ஆதாரங்களுடன் குற்றம் சாட்டப்பட்டிருந்தும் இன்னமும் ராஜினாமா செய்யாமல் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் சூழலில் விஜயதாச ராஜபக்சவின் செயல் ஒரு முன்னுதாரணம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்பொழுதும் அவர் தனக்கு நம்பிக்கை இல்லாத அரசியல் அமைப்புச் சபையில் ஒட்டிக் கொண்டிராமல் அப்பதவியை ராஜினாமா செய்தது இன்னொரு முன்னுதாரணச் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த முன்மாதிரியை பின்பற்றி இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றி வருவதற்காக த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ராஜினாமா செய்வார்களா?